அருள் தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாய்

மலர் : 5 இதழ் : 2 பிப்பரவரி 2014 (தனிச்சுற்றுக்கு மட்டும்)
thirukkalyanamatha.com



"சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்..." –மத்தேயு 19:14

# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 ! 261230
kalyanamatha@gmail.com

ஆசிரியர் & வெளியிடுபவர்
அருட்திரு **பபியான் ஜோசப்**

ஆலோசகர் குழு
அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட் சகோதரி. புளோரா

ஆசிரியர் குழு
அருட் சகோதரி. மைக்கிள்
திருத்தொண்டர்.டேவிட் வளன்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. பெலிக்ஸ் அந்தோனி
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்

விளம்பரம்செய்ய
தொடர்புகொள்ள
04639-261330
04639-261230

தொடர்பு முகவரி
திருத்தல அதிபர்
திருக்கல்யாணத்தாய் திருத்தலம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 - 261230

## மலரின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் அருளுரை | 1 |
| உலகதிருச்சபை செய்திகள் | 2 |
| மறைமாவட்ட செய்திகள் | 3 |
| பங்குச் செய்திகள் | 4 |
| நன்றிகள் பல கோடிகள் | 8 |
| அலைமோதிய திருவிழாகூட்டம் | 11 |
| அற்புதங்கள் சாட்சிகள் | 14 |
| மரியாயின் ஊழியர்சபை... | 19 |
| விவிலியத்தில் அன்னை.... | 21 |
| உள்ளத்தில் இருத்தி சிந்தித்தார் | 27 |
| கிச்சன் கார்னர் | 28 |
| வாழ்வு தரும் வார்த்தைகள் | 29 |
| மாத இதழ் வரவு - செலவு | 31 |
| குறுக்கெழுத்துப்போட்டி | 32 |


வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



திருக்கல்யாணத் தாய் இதழின் ஆர்வமிக்க வாசகர்கள் அனைவருக்கும் என் இனிய வாழ்த்துக்களையும் மனம் நிறைந்த ஆசிகளையும் வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்த மாத இதழ் திருக்கல்யாண அன்னையின் திருத்தல பெருவிழா நிகழ்வுகள் மற்றும் லூர்து அன்னையின் திருக்காட்சி சிறப்பிதழாக வெளிவருகிறது. அன்னையின் அருளால் இவ்வாண்டு திருவிழா மிகுந்த கோலகலமாக நடைபெற்றது. திருவிழாவின் இறுதி நாட்களில் அன்னையின் திருத்தேர் மெல்ல மெல்ல அசைந்து வந்த காட்சி இன்னமும் நம் மனக்கண்களை விட்டு அகலாது நிற்கிறது. மீண்டும் இத்திருவிழா என்று வரும் என நம் உள்ளங்கள் ஏங்கி நிற்கிறது.

அன்று லூர்து நகரிலே நம் அன்னை நாமே அமல உற்பவி என்று மொழிந்த திருக்காட்சி விழாவை ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மாதம் நாம் கொண்டாடுகிறோம். தாய் மரியைப் போல நாமும் தூய்மை நிறைந்தவர்களாக வாழ இவ்விழா நம்மை அழைக்கிறது.

அதோடு நமது திருத்தந்தையின் நேரடி பராமரிப்பில் செயல்பட்டு வரும் பாலர் சபைத் திருவிழாவையும் இந்த மாதம் கொண்டாடுகிறோம். சிறுவர்களின் நலனுக்காகவே அவர்களுடைய வருங்கால வாழ்விற்காகவும், ஞானத்தோடு கூடிய கல்வி அவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்று அவர்களுக்காக செபிப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். திருக்கல்யாண அன்னையின் பாசமும், பரிவும் அவர்களுக்கு குறைவின்றி கிடைக்க மன்றாடுவோம்.

ஒவ்வொரு நாளும் அன்னையின் திருப்பாதங்களை குடும்பத்தோடு வணங்கி வாழ்வில் வளம் பெற உங்களை வரவேற்கிறேன். உங்கள் அனைவருக்காகவும், எப்பொழுதும் அன்னையிடம் வேண்டுதல் செய்து உங்கள் குடும்ப நலனுக்காக செபிக்கிறேன்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!

அன்புடன்

**பங்குத் தந்தை**

பொத்தக்காலன்விளை.



# உலகத் திருச்சபை செய்திகள்

## உண்மையான அருட்பணியாளர் இயேசுவோடு நெருங்கிய உறவு கொண்டுள்ளார். – திருத்தந்தை.

கடவுளால் நமது மக்களுக்காகத் திருப்பொழிவு செய்யப்பட்டுள்ள ஓர் உண்மையான அருள் பணியாளர் இயேசுவோடு நெருங்கிய உறவுகொண்டுள்ளார். இந்த உறவு இல்லாமல் இருக்கும்போது அந்த அருள்பணியாளர் சிலை வழிபாட்டாளரா, நர்சியுஸ் தெய்வத்தை வணங்குபவராக மாறுகிறார். இத்தாலியின் ஜெனோவா உயர்மறை மாவட்ட கர்தினால் ஆஞ்சலோ பஞ்ஞாஸ்கோவுடன் வந்திருந்த அவ்வுயர் மறைமாவட்ட அருள்பணியாளர் குழுவுடன் சேர்ந்து புனித மார்த்தா இல்ல சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலி மறையுரையில் குருத்துவம் பற்றியே எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். இயேசுவின் பெயரில் நம் நம்பிக்கை வைத்துள்ளதால் நிலைவாழ்வைக் கொண்டுள்ளோம் என்று புனித யோவான் தனது முதல் மடலில் கூறியிருப்பதை விளக்கிய திருத்தந்தை இயேசுவோடு கொண்டுள்ள உறவில் அருள்பணியாளர் சக்தி பெறுவதால் இந்த உங்களின் உறவு எப்படி உள்ளது என்ற கேள்வியையும் அங்கிருந்த அருள்பணியாள்களிடம் எழுப்பினார்.

## திருச்சபைக்கு 19 புதிய கர்தினால்கள் அறிவிப்பு

இயேசுவின் திருமுழுக்குத் திருவிழாவையொட்டி ஞாயிறு மூவேளை செப உரைக்குப்பின் திருத்தந்தையால் திருச்சபையில் 19 புதிய கர்தினால்கள் அறிவிக்கப்பட்டனர். திருப்பீடச் செயலர் பேராயர் பெட்ரியோ பெர்லின் உட்பட 15 நாடுகளைச் சேர்ந்த 19 திருச்சபை அதிகாரிகள், திருப்பீடச் செயலர், உலக ஆயர் மா மன்றத்தின் பொதுச்செயலாளர் பேராயர் லொரென்சியோ பல்டிசாரி உட்பட 19 பேர்கள் கர்தினால்களாக அறிவிக்கப்பட்டு அடுத்த மாதம் 22-ம் தேதி வத்திக்கான் தூயபேதுரு பசிலிக்கா பேராலயத்தில் இடம்பெறும் திருப்பலியில் திருத்தந்தையால் கர்தினால்களாக உயர்த்தப்படுவார்கள்.

## ஒவ்வொரு குழந்தையும் மகிழ்வு மற்றும் நம்பிக்கையின் கொடை.

– திருத்தந்தை

இயேசுவின் திருமுழுக்கு திருவிழாவை முன்னிட்டு வத்திக்கானில் 32 குழந்தைகளுக்குத் திருமுழுக்கு அருளடையாத்தை வழங்கிய திருப்பலியில் மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ், விசுவாசம் எனும் பாரம்பரியச் சொத்தை குழந்தைகளுக்கு வழங்க வேண்டியது பெற்றோரின் கடமை, பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு வழங்கவல்ல மிகப் பெரிய பாரம்பரியச் சொத்து விசுவாமாகும் என்று திருதந்தை அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்

–நன்றி : நம்வாழ்வு

# மறை மாவட்ட செய்திகள்



01.01.2014 அன்று பனிமயமாதா ஆலயத்தில் மேதகு ஆயர் தலைமையில் புத்தாண்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

- 02.01.2014 அன்று காலை கொம்புத்துறையில் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது.
- 03.01.2014 அன்று ஆலந்தலையில் ஆயர் அவர்களின் தலைமையில் திருப்பலி நடைபெற்றது.
- 04.01.2014 அன்று காலை முதியோர் இல்லத்தில் பொன்விழா திருப்பலியும் அன்று மாலை மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலர்கள் கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 05.01.2014 அன்று காலை ஜீவஜோதி இல்லத்தில் திருஇருதய அருட்சகோதரிகளுக்கு மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது.
- 11.01.2014 அன்று பிரகாசபுரத்தில் சாத்தான்குளம் மறைவட்ட விழா மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 19.01.2014 அன்று குருக்குச்சாலை கார்மல் இல்லத்தில் குருக்குச்சாலை மறைவட்ட விழா மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் மறைவட்ட விழா நடைபெற்றது.
- 20.01.2014 அன்று காலை வேம்பார் தூய ஆவி ஆலய நூற்றாண்டு விழா திருப்பலியும் அன்று மாலை மறை மாவட்ட நிதிக்குழுக் கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 22.01.2014 அன்று மறைமாவட்ட கல்விக்குழு கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 23.01.2014 அன்று பொத்தக்காலன்விளை திருக்கல்யாணமாதா திருத்தல பெருவிழா திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் புது நன்மை, மற்றும் திடப்படுத்துதல் திருவருட்சாதனங்கள் மாணவ, மாணவியர்களுக்கு மேதகு ஆயர் அவர்களால் வழங்கப்பட்டது.
- 25.01.2014 அன்று கால்டுவெல் காலனி பொதுநிலையினர் நடுவத்தில் வைத்து தூத்துக்குடி மறைவட்ட விழா மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 26.01.2014 அன்று திருச்செந்தூர் ஜீவா நகரில் மணப்பாடு மறைவட்ட விழா மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது.
- 27.01.2014 அன்று மாலை பெருமணல் சிற்றாலயம் மேதகு ஆயர் அவர்களால் அர்ச்சித்து திறந்து வைக்கப்பட்டது. 7.01.14 அன்று சாத்தான்குளம் மறைவட்டத்திலும், 9.1.14 அன்று தூத்துக்குடி மறைவட்டத்திலும், 21.1.14 அன்று மணப்பாடு மறைவட்டத்திலும், 23.1.14 அன்று குறுக்குச்சாலை மறைவட்டத்திலும், 24.1.14 அன்று வடக்கன்குளம் மறைவட்டத்திலும், பாலர்சபை மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் போட்டிகள் நடத்தி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிறைவாக மாநாட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

நன்றி- **மறைமாவட்ட செய்திகள்**

# பங்குச் செய்திகள்

- 01.01.2014 அன்று நள்ளிரவு புத்தாண்டு திருப்பலி நடைபெற்றது. மதியம் இரண்டு மணிக்கு புனித தொன்போஸ்கோ இளைஞரணி சார்பாக விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டு மாலை நற்கருணை ஆசீருக்குப் பின் ஆலய மண்டபத்தில் வைத்து பங்குத் தந்தை அவர்களால் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. புத்தாண்டு தினத்தை முன்னிட்டு ஊரில் உள்ள மக்களனைவரும் பங்குத் தந்தையை சந்தித்து ஆசிபெற்றார்கள்.
- 02.01.2014 அன்று கிறிஸ்மஸ் விடுமுறைக்கு பின் நம் பங்கில் உள்ள பள்ளிகள்ஆரம்பமாயின.
- 04.01.2014 அன்று முதற்சனி வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.
- 07.01.2014 அன்று சாத்தான்குளம் மறைவட்ட அளவில் சாத்தான்குளத்தில் வைத்து பாலர் சபை மாநாடு நடைபெற்றது. அதில் நமது பங்கில் உள்ள புனித மரியன்னை துவக்கப்பள்ளி புனித வளனார் துவக்கப்பள்ளி, பாலர் சபை மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். அந்த மாநாட்டில் நம் மாணவிகளின் நடனம் நடைபெற்றது.அன்று நடைபெற்ற வினாடி-வினா போட்டியில் மாணவன் அந்தோணி ராவீன் பரிசு பெற்றார்.
- 12.01.2014 ஞாயிறு காலை திருப்பலியில் அன்னையின் திருவிழா அறிக்கை வாசிக்கப்பட்டவுடன் வாணவேடிக்கை முழங்கப்பட்டன. பக்தர்களுக்கு வெற்றிலை, பாக்கு, சந்தனம் வழங்கப்பட்டது. வழிபாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.
- 14.01.2014 அன்று முதல் திருப்பலி அருட்திரு. A.**ராஜா** OFM அடிகளார் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை பங்கு மேய்ப்பு பணிக்குழு, திருவிழா பணிக்குழுக்கள், பாடகர் குழுவினர், சிறப்பித்தனர். திருவிழா நவநாள் திருப்பலி பங்குத் தந்தை தலைமையில் நடைபெற்றது. அன்று மாலையில் புனித மிக்கேல் அதிதூதர் திருஉருவ பவனிக்குப் பிறகு சிவகங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு **எட்வர்ட் பிரான்சிஸ்** D.D. அவர்கள், பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்** அவர்கள் முன்னிலையில் மற்றும் அருட்தந்தையர்கள் புடைசூழ அன்னையின் திருவிழா கொடியேற்றி னார்கள். மாலை நற்கருணை ஆசீரில் மாசில்லாத நட்சத்திரமே என்ற சிந்தனையின் அடிப்படையில் மறைமாவட்ட செயலர், பேரருள் **அமல்ராஜ்** அவர்களால் மறையுரை வழங்கப்பட்டது. நற்கருணை ஆசீருக்குப் பிறகு அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது. அன்று இரவு அன்னையின் புகழ்பரப்பும் பணிக்குழுவினரால் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.
- 15.01.2014 இரண்டாம் திருவிழா காலைத் திருப்பலி அருட்திரு. A.**ராஜா** OFM அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை அனைத்து அன்பியங்களும் இணைந்து சிறப்பித்தார்கள். திருவிழா நவநாள் திருப்பலி அருட்திரு. **அடைக்கலம்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று மாலை நற்கருணை ஆசீரில் கருணையின் பிறப்பிடமே என்ற சிந்தனையின்அடிப்படையில் அருட்திரு. **கிராஸியூஸ்** அவர்கள்

மறையுரையாற்றினார்கள். அருட்பணி. **அடைக்கலம்** அவர்கள் தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது.

- 16.01.2014 மூன்றாம் திருவிழா காலைத் திருப்பலி அருட்திரு. A.**ராஜா** OFM அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை அமல அன்னை சபையார், திருக்குடும்ப சபையார் மற்றும் மரியாயின் சேனையாளர் சிறப்பித்தனர். மாலை நற்கருணை ஆசீரில் பாவத்தை வென்றவளே என்ற சிந்தனையின் அடிப்படையில் அருட்பணி. **பிரிட்டோ** அவர்கள் மறையுரையாற்றினார்கள். அருட்பணி. ராபின் அவர்கள் தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது. இரவு கலைநிகழ்ச்சி நடைபெற்றது.
- 17.01.2014 அன்று நான்காம் திருவிழா காலைத் திருப்பலி அருட்திரு. **பீற்றர் ராஜா** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை மேல்நிலைப் பள்ளி மாணவ,மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள்இணைந்து சிறப்பித்தார்கள். திருவிழா நவநாள் திருப்பலி அருட்திரு. A.**ராஜா** OFM அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாலை நற்கருணை ஆசீரில் தாவீதின் குலமலரே என்ற சிந்தனையின் அடிப்படையில் அருட்பணி. **ஆரோக்கியராஜ்** அவர்கள் மறையுரை வழங்கினார்கள். அருட்திரு. **ரெத்தினராஜ்** தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது. இரவு பள்ளி ஆண்டுவிழா சார்பாக கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.
- 18.01.2014 ஐந்தாம் திருவிழா காலைத் திருப்பலி அருட்திரு. **பீற்றர் ராஜா** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை துவக்கப்பள்ளி மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், சிறப்பித்தார்கள். திருவிழா நவநாள் திருப்பலி அருட்திரு A.**ராஜா** OFM அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாலை நற்கருணை ஆசீரில் ஞான பாத்திரமே என்ற சிந்தனையின் அடிப்படையில் அருட்பணி. G.**ஆலிபன்** அவர்கள் மறையுரை வழங்கினார்கள். அருட்பணி. A.**ராஜா** OFM அவர்கள் தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது. இரவு துவக்கப்பள்ளிகளின் ஆண்டுவிழா கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.
- 19.01.2014 ஆறாம் திருவிழா காலைத் திருப்பலி அருட்திரு. A.**ராஜா** OFM அடிகளார் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை திருக்கல்யாணத்தாய் புகழ்பரப்பும் பணிக்குழு, திருக்கல்யாணத்தாய் நற்பணிமன்றம் மற்றும் தன்ார்வ தொண்டர்கள் சிறப்பித்தார்கள். திருநாள் நவநாள் திருப்பலி பங்குத் தந்தை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாலை நற்கருணை ஆசீரில் குழந்தை வரம் தருபவளே என்ற சிந்தனையின் அடிப்படையில் அருட்பணி. **ஜஸ்டின்** அவர்கள் மறையுரை வழங்கினார்கள். அருட்திரு. **ஜான் போஸ்கோ** அவர்கள் தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது இரவு ஆரல்வாய்மொழி லெயோலா கல்லூரியின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.
- 20.01.2014 ஏழாம் திருவிழா காலைத் திருப்பலி அருட்திரு. **பீற்றர் ராஜா** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை தொன்போஸ்கோ இளைஞர்கள், புனித ஜெபஸ்தியார் நாடக குழுவினர், முன்னாள் மாணவர்கள் சிறப்பித்தார்கள். திருவிழா நவநாள் திருப்பலி அருட்திரு. A.**ராஜா** OFM

அடிகளார் தலைமையில் நடைபெற்றது. அன்று மதியம் நான்கு சந்தி கெபியில் பங்குத் தந்தை தலைமையில் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அசனவிருந்தும் நடைபெற்றது. அதன்பிறகு புனித செபஸ்தியார் சுரூபம் ஊரில் உள்ள அனைத்து மக்கள் இல்லங்களுக்கும் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது. அன்று மாலை நற்கருணை ஆசீரில் அருள் தரும் இமயமே என்ற சிந்தனையின் அடிப்படையில் அருட்பணி. இசிதோர் அவர்கள் மறையுரை வழங்கினார்கள். அருட்திரு. A.S.ராஜா அவர்கள் தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது. இரவு தொன்போஸ்கோ இளைஞர்களால் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

- **21.**01.2014 எட்டாம் திருவிழா காலை திருப்பலி அருட்திரு. A.ராஜா OFM அடிகளார் தலைமையில் நடைபெற்றது. திருவிழாவை நற்கருணை வீரர் சபையார், வின்சென்ட் தே பவுல் சபையார் மற்றும் ஊரில் உள்ள ஆண்கள் அனைவரும் சிறப்பித்தார்கள். மதியம் 12 மணிக்கு அருட்திரு. ஆல்பர்ட் அடிகளார் தலைமையில் மலையாளத்தில் திருப்பலி நடைபெற்றது. அன்று மாலை தூத்துக்குடி மறைமாவட்ட முன்னாள் முதன்மைக்குரு பேரருட்திரு. மரியதாஸ் அவர்கள் தலைமையில் சிறப்பு நற்கருணைப் பவனி நடைபெற்றது. அதன்பின் உடன்படிக்கையின் பேழையே என்ற சிந்தனையின் அடிப்படையில் அருட்பணி. பீற்றர் பால் அவர்கள் மறையுரை வழங்கினார்கள். அதன்பிறகு பேரருட்திரு. மரியதாஸ் அவர்கள் தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது. அன்று மாலை அருட்சகோதரி கீதா அவர்கள் தங்கள் குழுவினரோடு இணைந்து இறைஇரக்கத்தின் ஜெபவழிபாடு நடத்தினார்கள். அருட்சகோதரி அவர்களால் கல்யாணத்தாய் மரியே நான்காம் பாகம் குறுந்தகடு வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொற்பை இளைஞர்களின் வீரசாகச நிகழ்ச்சிகள் நடத்திக் காட்டப்பட்டன.

- **22.**01.2014 அன்று 9ம் திருவிழா திருமுழுக்கு தினமாக கொண்டாடப்பட்டது. இன்றைய வழிபாட்டை பீடப் பூக்கள் மற்றும் வெளியூர் வாழ் பொற்பை மக்கள் சிறப்பித்தார்கள். இன்றைய நவநாள் திருப்பலி அருட்திரு. Msgr மரியதாஸ் Former V.G அவர்கள் தலைமையில் மற்றும் குருக்கள் இணைந்து நடைபெற்றது. அதன்பின் பங்கு அலுவலக கட்டிடத்தை பங்குத் தந்தை தலைமையில் அர்ச்சித்து பேரருள். மரியதாஸ் அருள்திரு. பீற்றர் ராஜா ஆகிய இருவரும் திறந்து வைத்தார்கள். காலை 10மணிக்கு 29 குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் வழங்கப் பட்டது.மதியம் 12 மணிக்கு அருட்திரு. ஆல்பர்ட் அடிகளார் தலைமையில் மலையாளத் தில் திருப்பலி நடைபெற்றது. மாலை திருக் கல்யாணத் தாயின் 101வது ஆண்டு அதிசயத் தேர்ப்பவனி வெகு சிறப்பாக நடைபெற்றது. அதன்பின் மாலை ஆராதனையில் திருமணவரம் தருபவளே என்ற சிந்தனையின் அடிப்படையில் பாளை. மறைமாவட்ட முதன்மைக்குரு பேரருட்திரு. ஜோமிக்ஸ் அவர்கள் மறையுரை வழங்கினார்கள். அதன்பின் நற்கருணை ஆசீர் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து வாணவேடிக்கைகள் நடைபெற்றது.

- **23.**01.2014 அன்று 10ம் திருவிழா புதுநன்மை மற்றும் உறுதி பூசுதல் திருவிழா திருப்பலி தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு. **இவோன் அம்புரோஸ்** அவர்கள் தலைமையில் பங்குத் தந்தை மற்றும் குருக்கள் இணைந்து நடைபெற்றது. இன்றைய வழிபாட்டை புதுநன்மை பெறும் சிறுவர் சிறுமியர் மற்றும் அன்னையின் அனைத்துலக பக்தர்கள் இணைந்து சிறப்பித்தார்கள்.

திடமளிக்கும் திருக்கல்யாணத் தாய் என்ற சிந்தனையின் அடிப்படையில் திருப்பலியில் மறையுரை வழங்கப்பட்டது. மதியம் 12 மணிக்கு அருட்திரு. ஆல்பர்ட் அடிகளார் தலைமையில் மலையாளத்தில் திருப்பலி நடைபெற்றது. அன்று மாலை 4 மணிக்கு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. மாலை 5.30 மணிக்கு திருக்கல்யாண அன்னையின் 101வது ஆண்டு அதிசயத் தேர்ப்பவனி நடைபெற்றது. தேர் நிலைக்கு வந்த பிறகு பங்கு தந்தை தலைமையில் நற்கருணை ஆசீர் நடைபெற்றது. அதன்பிறகு ஆலய மண்டபத்தில் வைத்து பங்குத் தந்தை அவர்களுக்கு பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது.

24.01.2014 அன்று மாலை தேரில் பங்குத்தந்தை தலைமையில் திருப்பலி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து சிறப்பு ஊர் அசனம் நடைபெற்றது. அதன்பின் இரவு புனித செபஸ்தியார் முதல் நாள் நாடகம் நடைபெற்றது.

25.01.2014 அன்று மாலை தேரில் பங்குத் தந்தை தலைமையில் திருப்பலி நடைபெற்றது. இரவு புனித செபஸ்தியார் இரண்டாம்நாள் நாடகம் நடைபெற்றது.

26.01.2014 அன்று பங்கில் உள்ள அனைத்துப்பள்ளிகளிலும் குடியரசு தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பள்ளிகளில் தாளாளர் தந்தை தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார்கள். மாணவர்கள் அணிவகுப்பு மரியாதையையும் கலைநிகழ்ச்சிகளையும் பார்வையிட்டார்கள். மாலை புனித செபஸ்தியார் மூன்றாம் நாள் நாடகம் நடைபெற்றது. நாடகம் முடிவில் அனைத்து மக்களும் புடைசூழ மங்கள கீதம் இசைக்க பங்குத் தந்தை தலைமையில் பவனியாக சென்று கொடியிறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

**- பங்குத்தந்தை**

# சிறப்பு ஊர் பொதுக்கூட்டம் – 2014

பொத்தக்காலன்விளை சிறப்பு ஊர் பொதுக்கூட்டம் 24.01.2014 அன்று காலை 10 மணிக்கு கோவில் மண்டபத்தில் வைத்து பங்குத்தந்தை அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் ஆரம்பமானது.

**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

1. திருச்சபைக்கு விரோதமாகவும், தாய் தந்தை விருப்பம் இல்லாமலும் நடைபெறும் திருமணம் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட பையன் மற்றும் பெண் மீது மட்டும் நடவடிக்கைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். தாய் தந்தையர் மீது நடவடிக்கை இல்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

2. கோயிலுக்கு மேற்கூரை போடுவதற்கு ஒட்டுமொத்தமாக சம்மதம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பங்குத்தந்தை மேற்பார்வையில் குழு அமைத்து மேற்கண்ட பணி செய்ய தீர்மானிக்கப்பட்டது. கீழ்க்கண்ட ஏழுபேரும் இக்குழுவில் உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டனர். **I.ஜேம்ஸ், 2. V.R.A.ஜெயராஜ் 3. V.அருள் 4. தூசை செசன்ராஜ் 5. டொமினிக் 6.ஜஸ்டீன் 7. குமார்** இந்த குழுவில் திரு.**ஜேம்ஸ்** ஒருங்கிணைப்பாளராக செயல்படுவார். மேற்கண்ட எல்லா பணிகளும் பங்குத் தந்தை தலைமையில் நடைபெறும்.

3. சிலுவைப்பாதை அமைப்பது சம்பந்தமாக கோயில் மேற்கூரை பணி அனைத்தும் முடிந்ததும் அடுத்த கூட்டத்தில் முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

4. ஒலி பெருக்கி சம்பந்தமாக திருப்திகரமாக இருந்தது என்று பாராட்டு தெரிவிக்கப்பட்டது.




# நன்றிகள் பலகோடிகள் 04.01.2014 முதல்சனி உணவு நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| அந்தோணி பாஸ்கர், பொற்பை | 1000.00 |
| ரெஜினாள் மேரி, பொற்பை | 100.00 |
| மிக்கேல்ராஜ் | 100.00 |
| ஜோசப் சந்திரசேகர், பொற்பை | 200.00 |
| ரோஸ் சேவியர், பொற்பை | 3000.00 |
| விபாகர் டாப்னி, கூட்டப்புளி | 1000.00 |
| வசந்தி, திசையன்விளை | 100.00 |
| தேவமாதா போட், கன்னியாகுமரி | 1000.00 |
| சந்தனதிரவியம், சூசைநகர் | 3200.00 |
| அற்புதராஜ் குடும்பத்தினர், பொற்பை | 1000.00 |
| அந்தோனி மிக்கேல்ராஜ், | 500.00 |
| ஸ்டாலின் அமலா, உடன்குடி | 500.00 |
| ராஜ், பொற்பை | 200.00 |
| லூக்காஸ் மளிகை, திருப்பூர் | 1000.00 |
| ராஜேந்திரன், பொற்பை | 100.00 |
| பொள்ளாச்சிவாழ் பொற்பை இறைமக்கள் அரிசி | |
| 15 மூடைக்கு | 46500.00 |
| சுமதி, பொற்பை | 200.00 |
| விசுவாசம் மிக்கேலம்மாள், கோவில்பட்டி | 500.00 |
| ஜெயக்குமார், சித்தன்துறை | 200.00 |
| மரியகாகு ராஜா பிரிடா, வெள்ளக்கோவில் | 2600.00 |
| ஆக்னஸ் கென்ஸா, ஆத்தூர் | 1000.00 |
| பங்கஜதாஸ், மேலராமன்புதூர் | 1000.00 |
| ஜெபஸ்டின் ரெனிசா, மதுரை | 500.00 |
| ஜெயராஜ், பொற்பை | 500.00 |
| செல்வமணி, ராஜாவூர் | 1000.00 |
| தங்கராஜ் ஜோசப், காலன்குடியிருப்பு | 1000.00 |
| அல்போன்ஸ், பிள்ளைதோப்பு | 5000.00 |
| ஜெரின் ஸ்டோர், உடன்குடி | 500.00 |
| அந்தோணிராஜ், பொற்பை | 500.00 |
| பனியடிமை ஜெகன், முள்ளூர்துறை | 200.00 |
| செல்வமேரி ஜாண்கிருபாகரன், கோவில்பட்டி | 500.00 |
| சேவியர் சார்லஸ், பிரகாசபுரம் | 1000.00 |
| ஏசுவடியான், பொற்பை | 100.00 |
| லாம்பர்ட் ராஜகனி, புன்னக்காயல் | 500.00 |
| மிக்கேலம்மாள், சிங்கம்பாறை | 300.00 |
| மகேஸ் பிரியா, புன்னக்காயல் | 1000.00 |
| விண்ணரசன், கடகுளம் | 100.00 |
| கார்லூயிஸ் | 1000.00 |
| மேரி அல்போன்சாள், ஏரல் | 875.00 |

| | |
|---|---|
| பென்சன் அருள், | 1000.00 |
| லிவிண்டா நெல்சன், கேசவன்புத்தன்துறை | 200.00 |
| லாசர் வில்லவராயர் | 1000.00 |
| டயஸ் ஆனந்த், நாசரேத் | 100.00 |
| குணசேகரன், திருச்செந்தூர் | 100.00 |
| சுரேஸ்பாண்டியன், பொற்பை | 300.00 |
| சேவியர், சத்தான்குளம் | 100.00 |
| சகாய அன்னை போட், தூத்துக்குடி | 1000.00 |
| மலர், மேலராமன்புதூர் | 100.00 |
| இருதய பாஸ்கர், சூசைநகர் | 500.00 |
| குயின்மேரி மோனால்ட், குறும்பனை | 500.00 |
| விக்டர் அமுதா, | 300.00 |
| அலெக்ஸ், பொற்பை | 1000.00 |
| ஆரோக்கிய சுதாகர், கொழுந்தட்டு | 100.00 |
| ரதராஜன் ரெக்ஸி விக்டோரியா, திரேஸ்புரம் | 1000.00 |
| அந்தோணி செல்வன், சாத்தான்குளம் | 1000.00 |
| ஜெஸ்டஸ், திருநெல்வேலி | 500.00 |
| லீமா ரோஸ்லின் | 100.00 |
| தீர்த்தூஸ், | 300.00 |
| லாட்சன், | 500.00 |
| அந்தோனி செல்வராணி | 500.00 |
| கென்னடி கலா, தூத்துக்குடி | 100.00 |
| சூசை, பொற்பை. | 200.00 |
| மொத்தம். | 90075.00 |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| திரு. எட்வின் காமராஜ் டெய்சிராணி குடும்பத்தினர் | 10000 சாப்பாடு பிளேட், |
| ஸ்டாலின் அமலா, உடன்குடி | 30 தேங்காய் |
| திரு. அன்னையின் அடிமை, பொற்பை | பீடப் பூக்கள் |
| ஹாசன் பஸ் காய்கறி ஏற்றிவந்த வாடகை | நன்கொடையாக |
| பெயர்சொல்ல விரும்பாத நபர் | அரிசி 300 கிலோ |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | அரிசி 100 கிலோ |
| ஜஸ்டின், சென்னை | அரிசி 100 கிலோ |
| ஜெரோம் குயிண்டின், கவரப்பேட்டை | அரிசி 100 கிலோ |
| ஜோசப் செல்வராஜ், ஈரோடு | அரிசி 100 கிலோ |
| சூசைமிக்கேல், கோவை | அரிசி 50 கிலோ |
| ராஜேஸ் அமலா, பொற்பை | அரிசி 50 கிலோ |
| பன்னீர்செல்வன், திசையன்விளை | அரிசி 50 கிலோ |
| ரவி விஜி, மும்பை | அரிசி 50 கிலோ |
| ரூபி ஸ்டோர், பொற்பை | அரிசி 50 கிலோ |
| சுமதி, பொற்பை | அரிசி 25 கிலோ |
| குழந்தைசாமி, வாடியூர் | அரிசி 100 கிலோ |
| அன்னமணி, ராஜாவூர் | அரிசி 25 கிலோ |
| மெர்சின் ராஜா, அழகப்பபுரம் | அரிசி 25 கிலோ |
| மார்டின் லிசா, ஆசாரிபள்ளம் | அரிசி 25 கிலோ |
| செல்வன் கவிதா, திருநெல்வேலி | அரிசி 25 கிலோ |

| | |
|---|---|
| J.A.ரவிஸ்டர், பொற்பை | – தக்காளி 7 பெட்டி உ.கி.3மூடை வெங்காயம் 4 மூடை கேரட் 1 மூடை சேனைக்கிழங்கு 60 கிலோ, மிளகாய் 1 மூடை |
| S.கருணாகரன், பொற்பை | – தக்காளி 5 பெட்டி, |
| துரை, கோயம்பேடு | – மாங்காய் 10 கிலோ |

## முதற்சனி மதிய உணவு செலவு விபரம் : (04.01.2014)

| | |
|---|---|
| யோவான் சமையல் குழு | 13000.00 |
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 400.00 |
| அலெக்ஸ், விறகு – 53 எடை | 7155.00 |
| சேசு ஜெயராஜ், மற்றும் பணியாளர்கள் | 3300.00 |
| பேச்சியம்மாள் தூய்மைபணி | 2500.00 |
| ஜஸ்டின் மின்னல் தண்ணீர் மூடை – 92 | 5152.00 |
| ஹென்றி மளிகை | 48350.00 |
| ஜெயக்குமார் டிராக்டர் வாடகை – 7 நடை | 1750.00 |
| வின்சென்ட் உணவு விடுதி | 1370.00 |
| இம்மான் தண்ணீர் லோடு வண்டி வாடகை | 1600.00 |
| இருதயராஜ் ரூபி ஸ்டோர் அரிசி 2 மூடை | 6400.00 |
| மொத்தம் | 90977.00 |

| | |
|---|---|
| முன்னிருப்பு வங்கியில் | 34857.00 |
| கையில் | 194.00 |
| நன்கொடை மூலம் வரவு | 90075.00 |
| பங்குத்தந்தை மூலம் வரவு | 1000.00 |
| ஜோஸ் குடும்பத்தினர் வங்கியில் | 3000.00 |
| மொத்தம் | 129126.00 |
| செலவுகள் | 90977.00 |
| இறுதி இருப்பு | 38149.00 |

| | |
|---|---|
| வங்கியில் | 37857.00 |
| கையில் | 292.00 |
| இறுதி மொத்த இருப்பு | 38149.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 30.11.13 அன்று இருப்பு | 199202.00 |
| 01.12.13 முதல் 31.12.13 வரை விற்பனை | 135374.00 |
| மொத்தம் | 334576.00 |
| 01.12.13 முதல் 31.12.13 வரை செலவு (பொருட்கள் + சம்பளம்) | 86946.00 |
| 31.12.13 அன்று இருப்பு | 249630.00 |

– திருத்தலக்கடை நிர்வாகிகள்

# அலைமோதிய திருவிழாக் கூட்டம்

பொத்தக்காலன்விளை புனித திருக்கல்யாண அன்னையின் திருவிழா ஜனவரி மாதம் 14-1-2014 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கி 10 நாட்கள் சிறப்பு நவநாள் திருப்பலிகள் கொண்டாடி 23-1-2014 அன்று அதிசயதேர்ப்பவனியுடன் இனிதே முடிந்தது. இந்த ஆண்டு 2 ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் என்று இறைபணியாளர்கள் மொத்தம் 100க்கு மேல் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள்.

தமிழகமெங்கும் இருந்து அலைகடலென திரண்ட பக்தர்கள் கூட்டம் குறிப்பாக 9 ம், 10ம் திருவிழாக்களில் கூடிய கூட்டம் எல்லோரையும் திக்குமுக்காட வைத்தது. வெளியூர் மக்களின் உயிரோட்டமான பங்கேற்பு பொத்தக்காலன்விளை பங்கை அருள்தரும் இமயம் திருக்கல்யாண அன்னை யின் பாதத்தில் அர்ப்பணித்து அதன் புகழ் இமயத்தை எட்டியது. 9ம், 10ம் திருவிழாக்களில் நடந்த 101வது அதிசய தேர்ப் பவனியில் கலந்து கொண்ட உள்ளூர், வெளியூர் பக்தர்களின் கூட்டம் மைதானத்தை மறைத்தது. பக்தர்கள் ஆண், பெண் என்று பாராமல் வடம் பிடித்த விதம், தேர் இழுக்கும் போது திருக்கல்யாணத் தாயே என கோசமிட்ட குரல் இமயம் வரை எட்டியது. மக்கள் பக்தியாலும் அன்னையின் மீது கொண்ட பாசத்தாலும் ஈர்க்கப்பட்டு ஒருமைப் பாட்டிலும், அன்பிலும் அன்னை புகழ் பாடி அக்களித்தனர். மரியே வாழ்க திருக்கல்யாண அன்னையே வாழ்க என்று பக்தர்கள் பரவசத்தால் வாழ்த்துப் பாடி ஆனந்தமாய் கொண்டாடினர். தேருக்குப் பின் ஜெபமாலை மற்றும் பக்தி பாடல்கள் பாடி ஒரே குரலில் அன்னையை மகிமைப் படுத்தினர். அதிசய தேர்ப் பவனி அலங்காரமாய் ஜொலித்திட ஆகாயம் அதிர்ந்திட, மக்கள் கூட்டம் கூட்டமாய், சாரை, சாரையாய் தேர் வீதியில் வலம் வந்தனர். தேர்ப் பவனியை வழிநடத்தி செல்லும்போது உப்பு தூவுதல், மாலை சூடுதல், பூ தூவுதல், மற்றும் நாணயங்கள் தூவுதல் என்று மக்கள் வேண்டுதலை அன்னையிடம் சமர்ப்பித்தனர். நல்ல மிளகுதூவி, பதம் பாடி தங்கள் பக்தியை வெளிப் படுத்தி, வரலாறு மறக்க முடியாத திருக்கல்யாண அன்னையின் புகழை வானுயர உயர்த்தினார்கள். மக்கள் திருக்கல்யாணத் தாய் பாதுகாவலியின் ஆசிரைப் பெற்று ஆனந்தக் கண்ணீர் வடித்து கோலாகலமாய் கொண்டாடி னார்கள்.



திருக்கல்யாண அன்னையே ! இமயமாய் இருந்து அருள் பாவிப்பவளே, உம்மைநாடி வரும் பக்கதர்களை அரவணைத்து பாது காப்பவளே ! வழிநடத்துமம்மா என்றும் எம் வாழ்க்கையை உம் பாதம் அர்ப்பணித்து வேண்டுகிறோம். எல்லா மக்களின் குறைபோக்கி நிறைவைத் தந்து பாதுகாத்தருளும் தாயே. – அருட்சகோதரி. **மிக்கேல்**, பொற்பை

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330**

**04-01-2014 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 3107 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 2016 பேர் |
| சுகப்பிரசவம் | - | 1713 பேர் |
| நற்சுகம்பெற | - | 2860 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 2140 பேர் |
| தேவஅழைத்தல் | - | 1792 பேர் |
| வேலைகிடைக்க | - | 2467 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 2653 பேர் |
| குடும்பசமாதானம் | - | 3164 பேர் |
| குடும்பநலன் | - | 2679 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 1974 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 1860 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 2132 பேர் |
| மனஅமைதிக்காக | - | 2347 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 1416 பேர் |
| மனமாற்றமடைய | - | 2413 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 2712 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 1560 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 1963 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 1895 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 1537 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** **- பங்குத்தந்தை**

**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

# திருக்கல்யாணத்தாயின் மண ஒப்பந்த விழா



திருக்கல்யாணத்தாயை வணங்கும் நாம் அனைவரும் புன்சிரிப்பு என்ற பூமாலை, பிறரன்பு என்ற வெற்றிலை, இறைவிசுவாசம் என்ற பட்டாடை, சகித்துத்தன்மை என்ற ரோஜா மலர், பகிர்தல் என்ற தேங்கய், இறைவிசுவாசம் என்ற பழங்கள், கீழ்ப்படிதல் என்ற இனிப்புகள், தாழ்ச்சி என்ற வைரமாலைதன்னடக்கம் என்ற அலங்கார பொருள், இறைநம்பிக்கை என்ற மல்லிகைப்பூ, தெய்வபயம் என்ற கதம்பம் ஆகியவைகளை நம் வாழ்க்கை என்னும் தாம்பூலத்தட்டில் வைத்து காணிக்கையாகக்குவோம்.

–அன்னையின் பக்தை

# விண்ணக அருளே என்னக எழிலே

வண்ணமுற தன்னழகு ஜொலிக்க
பார்க்க பார்க்க பரவசமூட்டி
மண்ணக உயிர்கள் மகிழ்வுற
பாசக் கரங்களால் அள்ளியணைத்து
உண்மை யென்னும் இலக்கணம்
பாரினில் தளிர்த்திட தயவுகாட்டி
விண்ணக அருளைப் பொழிந்து
பாலைவன வாழ்வை சோலைவனமாக்கினாய்!



கஞ்சமில்லாமல் கருணை மழையில் நனைத்து
உள்ளம் மகிழ வரமருளி
கொஞ்சும் மொழியால் எனை குளிர்வித்து
உவப்புடன் உறவாடும் என் தாயவள்!

இறைவன் வளர்த்த யாகக் கனலில்
ஒளிர்ந்த வைரமே மரியாவென
மறைபோற்ற மாண்புறும் மாணிக்கமாய்
ஓங்கு புகழ் பெற்ற என் அன்னையே
கறையில்லா வாழ்வு யான் வாழ
ஓவிய நங்கை நின்னருளால்
நிறைவான வளங்கள் அள்ளிக்கொடுத்து
ஓயாமல் தயவாய் எனைக் காக்கும்
திருக்கல்யாண அன்னையே நீ வாழ்கவே!

**– ம.ரூபி அனன்ஸியா.** ஆசிரியை, திருச்சி

## 4.1.2014 அன்று பொங்கல் வழங்க உதவி செய்தவர்கள்

**தேனிட்டஸ்** பொற்பை – 2500/-
**தேஜஸ் பிரின்ஸ் ஒயிட்** பொற்பை – 2500/-
10 மூடை தண்ணீர் உதவி செய்தவர்கள்
**சின்னத்தம்பி எ ஈனமுத்துட்டர்,** நரையன்குடியிருப்பு
**பூலோக பாண்டி** நரையன்குடியிருப்பு

## 4.1.2014 அன்று ரஸனா வழங்க உதவி செய்தவர்கள்

**ராஜா** பொற்பை – 1000/-
**செல்டன்** கர்நாடகா
திருக்கல்யாணி சவுண்ட் சர்வீஸ் – 200/-
பெயர் சொல்ல விரும்பாத நபர் – 200/-
S.**பீட்டர்,** பொற்பை – 500/-
M.**திலகர்,** பொற்பை – 500/-
**மாரியப்பன்,** சென்னை – 300/-
**அசோக்** – 200/-

**ஐஸ் எடுத்துவர உதவியவர்கள்**
**ஜஸ்டின்,** பொற்பை

**3 டிரம் தண்ணீர் உபயம்**
**இம்மானுவேல்,** பொற்பை

ஒருங்கிணைப்பாளர்கள்
திரு. **ஜான்**
திரு. **ஆனந்தராஜ்**
திரு. **இன்பராஜ்**




# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

1. பிளாஸ்டிக் சர்ஜரி அறுவைசிகிச்சையில் வெற்றி தந்ததற்கு நன்றி. –**மிக்கேல் உஷா,** பொற்பை
2. திருமணம் நடந்தமைக்கு நன்றி! – **பிரான்சிஸ் மரியபுருஸ்,** பூந்துறை
3. ஆண்குழந்தை பிறந்ததற்காக நன்றி – **லிசா,** வீரபாண்டியன்பட்டணம்
4. ஏழுவருடங்களுக்கு பிறகு குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி, – **கிங்ஸ்லி ஷீபா,** மார்த்தாண்டம்.
5. குவைத்தில் வேலை கிடைத்தமைக்கு நன்றி. –**தினேஸ் பிரான்சிஸ்,** பொழியூர்
6. திருமணம் சிறப்பாக நடைபெற்றதற்கு நன்றி. – **சோபன் நேருஜின்,** உவரி
7. நல்ல சுகம் கிடைத்தமைக்கு நன்றி – **ஆல்வின்** கண்டன் விளை
8. நோயில் இருந்து விடுதலை கிடைத்தமைக்கு நன்றி – **சூசையடிமை சுனிதா ரவி,** புத்தன்துறை.
9. குடும்பத்திற்கு கிடைத்த அனைத்து நன்மைகளுக்கும் நன்றி. –**ஜெகதீஸ்பாபு சுகந்தி,** சென்னை
10. திருமணவரம் கிடைத்தமைக்கு நன்றி – **எஸ். செல்வி திரவியம்,** ஆலந்தலை.
11. விக் காய்ச்சலில் இருந்து விடுதலை கிடைத்ததற்கு நன்றி. –**கிறிஸ்டியானந்த்,** பொலியூர்
12. வெளிநாடு செல்ல விசா கிடைத்ததற்கு நன்றி. – **இக்னேஷியஸ்,** குளச்சல்.
13. புதிய வாகனம் தந்ததற்கு நன்றி, – **புஷ்பராணி அந்தோணி,** முள்ளூர்துறை
14. வேலை கிடைத்ததற்கு நன்றி. – **ஹேமா,** சாத்தான்குளம்
15. அறுவைசிகிச்சை நல்லமுறையில் நடந்ததற்கு நன்றி. –**உபால்ட் ராஜ் லதா** முள்ளூர்துறை
16. திருமணம் நல்லமுறையில் நடந்ததற்கு நன்றி. –**ஜெமிலா எடிசன்,** நொச்சிகுளம்
17. வீடு கட்டி முடித்ததற்கு நன்றி.– **ஹர்மிக் வில்மா,** முட்டம்
18. திருமண வரம் கிடைத்தமைக்கு நன்றி – **ஹில்லரி மோர்ஜின்.** மணப்பாடு
19. குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி – **காகுராஜா,** பொற்பை
20. திருமண வரம் கிடைத்தமைக்கு நன்றி – **ரூபன் தர்ஷிணி.** ராஜாக்கமங்கலம்
21. குழந்தை பாக்கியம் கிடைத்ததற்கு நன்றி.– **ஹெரினா** கோடிவிளை
22. உடல் நலம் கிடைத்தமைக்கு நன்றி – **புஷ்பம்** குளச்சல்
23. குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி.– **மிக்கேல்பிரமிளா** குளச்சல்
24. குடும்ப சமாதானம் கிடைத்தமைக்கு நன்றி – **மீனா** குளித்துறை
25. குழந்தை பாக்கியம் கிடைத்ததற்கு நன்றி. – **விவிதா.** கன்னியாகுமரி.
26. நல்ல வாழ்க்கை துணையாக அமைந்ததற்கு நன்றி **பட்டுபுஷ்பா,** பொற்பை
27. நற்சுகம் தந்து உயிர் காத்தமைக்கு நன்றி, –**ஒத்தாசை மரியான்,** பொற்பை
28. எல்லா தீமையிலிருந்து காப்பாற்றி தொழில் முன்னேற்றம் தந்தமைக்கு நன்றி – **ஜோஸ்பின்** பொற்பை

**- பங்குத்தந்தை**

# முதல் சனி வழிபாடு
# (4.01.2014)



திருக்கல்யாணத்தாய் திருத்தலத்தில் நவம்பர் மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 4.01.2014 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு.**சன்னன்** அடிகளார் குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை மலையாளத்திலும் அருட்திரு.**பிரதீஸ்** அடிகளார் தமிழிலும் நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. சப்பரப் பவனியின்போது மலையாளத்திலும், தமிழிலும் பாடல்கள் பாடப்பட்டது. நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துகள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. அருட்திரு.**ஜெகதீஸ்** அடிகளார், அவர்கள் தலைமையில், பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** அருட்திரு. **சேவியர் அருள்ராஜ்,** அருட்திரு.**ஜார்ஜ் ஆலிபன்** அருட்திரு.**ஜான்போஸ்கோ** அருட்திரு. **ஆரோக்கிய ராஜ்,** அருட்திரு. **A.S.ராஜா, அருட்திரு. அகிலன்** அருட்திரு. **ரோஜர்,** அருட்திரு. **பீட்டர் ராஜா** அருட்திரு. **கிராசியூஸ்,** அருட்திரு. **ராபின்** அருட்திரு. **கலைச்செல்வன்,** அருட்திரு.**பிரதீஸ்** , அருட்திரு.**சன்னன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு.**ஜெகதீஸ்** அடிகளார் தமிழிலும்,அருட்திரு.**சன்னன்** அடிகளார் மலையாளத்திலும் மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து **220** வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **10000** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், குழந்தைகளுக்கு பாலும் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறைஇரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதை அருட்திரு. **சேவியர் அருள்ராஜ்** அடிகளார் வழி நடத்தினார்கள். அதன்பின்பு அருட்திரு. **அகிலன்**தலைமையில் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. அதன்பின் பங்குத்தந்தை தலைமையில் சிறப்பு மாலை ஆராதனை நடைபெற்றது.

**– பங்குத்தந்தை**

# டிசம்பர் 2013 – வரவு செலவு விபரம்

**வரவுகள் :** முன்னிருப்பு

| | | |
|---|---|---|
| வங்கியில் ரூ. 150679.00 | | |
| கையில் ரூ.5470.00 | 156139.00 | |
| திருப்பலி 312X70 (முதற்சனி 274 அலுவலகம் 38) | 21840.00 | |
| ஞாயிறு காணிக்கை பொற்பை - 10980.00 | | |
| முதலூர் - 560.00 | 11540.00 | |
| இதர நன்கொடைகள் | 13800.00 | |
| ஆலய வீடு வாடகை | 500.00 | |
| ஆலய உண்டியல்கள் மூலம் | 281370.00 | |
| காமராஜ் நன்கொடை (பங்கு அலுவலகம் | 200000.00 | |
| முதல்சனி கடைகள் வரவு | 4030.00 | |
| ஞானஸ்நானம் | 500.00 | |
| லெனின் நன்கொடை | 1000.00 | |
| அடக்கம் + கல்லறை | 625.00 | |
| பள்ளிகள் மூலம் | 5316.00 | |
| உபதேசியார் மூலம் கிடா, மாடு ஏலம் | 6075.00 | |
| பழைய பேப்பர் மற்றும் மட்டை விற்பனை | 300.00 | |
| மொத்தம் | 703035.00 | |
| **செலவுகள் :** | | |
| செய்தித்தாள் | | 250.00 |
| வாகனம் சரிசெய்ய | | 5745.00 |
| மின்கட்டணம் | | 26156.00 |
| முதல் சனி குருக்கள் படி | | 7550.00 |
| எலிசபெத் விளம்பரம் | | 1500.00 |
| தூத்துக்குடி குருப்பட்ட வண்டி வாடகை பங்கிலிருந்து... | | 2800.00 |
| மேக் டி.வி விளம்பரம் | | 4000.00 |
| முதல் சனி உணவு வகைக்கு | | 62000.00 |
| அருட்தந்தை டேவிட் அன்பளிப்பு + துணிகள் | | 5100.00 |
| தியானம் குருக்கள் படி | | 700.00 |
| சிமெண்ட் 68 மூடை | | 24550.00 |
| இரும்பு கம்பிகள் 1095 கிலோ | | 55036.00 |
| செங்கல்கள் 5000 | | 27830.00 |
| சிமெண்ட் 102 மூடை | | 36320.00 |
| தொலைபேசி கட்டணம் | | 809.00 |
| செல்வன் கூலி முன்பணம் | | 100000.00 |
| மேல்மாடி டாய்லெட் வேலை கூலி | | 13550.00 |
| தொடக்கப்பள்ளி கூரைதளம் சரிசெய்ய | | 25375.00 |
| துப்புரவு பணியாளர்கள் கூடுதல் வேலைக்கு | | 500.00 |
| கிறிஸ்து பிறப்பு கேக் & இனிப்புகள் | | 750.00 |
| கோயில் மின் மீட்டர் மாற்ற + படி | | 2647.00 |
| வண்டி வாடகை | | 200.00 |
| அருட்சகோதரர் படி | | 500.00 |
| சிமெண்ட் 65 மூடை | | 22250.00 |

| | |
|---|---|
| கோயில் பெயிண்டிங் பொருட்கள் + கூலி | 62908.00 |
| குடில் போட்டி பரிசுகள் | 3000.00 |
| அருட்சகோதரர் ராஜன் படி | 1000.00 |
| டோபி (கோவில் + பங்களா) | 550.00 |
| உதவித்தொகைகள் | 3150.00 |
| டீசல் (ஜெனரேட்டர் + வாகனம்) | 7071.00 |
| கல்வி உதவித் தொகை | 2000.00 |
| கோயில் கடிகாரம் சரிசெய்ய | 200.00 |
| மிக்ஸி சரிசெய்ய | 110.00 |
| ஓஸ்தி வாங்கியது | 425.00 |
| செக்போஸ்ட் | 110.00 |
| மருந்துகள் | 1427.00 |
| பழங்கள் இனிப்புகள் | 1100.00 |
| நோட்டு, கொசுவர்த்தி + இதர பொருட்கள் | 1333.00 |
| மளிகை பொருட்கள் | 2318.00 |
| பால் + தண்ணீர் | 1007.00 |
| சிக்கன் | 540.00 |
| காய்கறி | 200.00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 500.00 |
| தியானம் டீ செலவு | 1600.00 |
| ஆலய இன்வெர்ட்டர் பியூஸ் சரிசெய்ய | 100.00 |
| ஆலய பராமரிப்பு செலவுகள் உபதேசியார் மூலம் | 2850.00 |
| குடில் புல் எடுத்துவர வண்டி செலவுகள் | 2000.00 |
| கிறிஸ்து பிறப்பு ஆலய பூக்கள் | 3490.00 |
| சுரூபங்கள் பெயிண்டிங் முன்பணம் | 10000.00 |
| திருவிழா மேளம் முன்பணம் | 5000.00 |
| வரதன் கம்பு கட்ட முன்பணம் | 5000.00 |
| திருவிழா வாணம் முன்பணம் | 1000.00 |
| பாடகர் குழு சீருடை | 8000.00 |
| உபதேசியார் ஊதியம் | 4000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | 3000.00 |
| துப்பரவு பணியாளர்கள் ஊதியம் | 7000.00 |
| தொடக்கப் பள்ளி ஆசிரியை ஊதியம் | 2000.00 |
| பங்குத் தந்தை படி | 6000.00 |
| பங்குத் தந்தை திருப்பலி படி | 1500.00 |
| திருத்தல பங்களிப்பு | 10000.00 |
| புனித வரி<br>திருப்பலி 312 × 5 = 1560<br>அடக்கம் 1× 7 = 7<br>ஞானஸ்நானம் 1 × 5 = 5<br>திருப்பலி 282×50 = 14100 | 15672.00 |
| **மொத்த செலவு** | **605779.00** |

| | | | |
|---|---|---|---|
| | | இறுதி இருப்பு விபரம் | |
| மொத்த வரவு | ரூ.703035.00 | வங்கியில் | ரூ. 96649.00 |
| மொத்த செலவு | ரூ. 605779.00 | கையில் | ரூ. 607.00 |
| இருப்பு | ரூ. 97256.00 | மொத்தம் | ரூ. 97256.00 |

# திருத்தல பெருவிழா நிகழ்வுகள்



திருத்தல பெருவிழா கொடியை சிவகங்கை ஆயர் மேதகு. எட்வர்ட் பிரான்சிஸ் அவர்கள் ஏற்றி வைக்கிறார்கள்.




திருத்தல பெருவிழா திருப்பலியை தூத்துக்குடி ஆயர் மேதகு. இவோன் அம்புரோஸ் அவர்கள் தலைமை தாங்கி நிறைவேற்றி வைக்கிறார்கள்.

புனிதர்களின் பாதையில்....

# மரியாயின் ஊழியர் சபையை நிறுவிய ஏழு புனிதர் (1233)



புனித பிலிப்பென்சி

1231-ம் ஆண்டிலே இத்தாலியா நாட்டில் பிளாரன்ஸ் நகரில் பக்தியுள்ள ஏழு வாலிபர்கள் வசித்து வந்தனர். இவர்கள் தேவதாய் மீது மிகுந்த பக்தி கொண்டவர்கள். மாதாவுக்குத் தோத்திரமாக தொடங்கப்பட்டிருந்த ஒரு சபையில் இவர்கள் சேர்ந்திருந்தார்கள். அதே ஆண்டில் ஆகஸ்ட் 15-ம் நாளன்று அதாவது மாதா பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாளில், தேவதாய் அவர்களுக்குத் தோன்றினாள். அவர்கள் உலகத்தைவிட்டு விலகி அவளது சேவைக்குத் தங்களை கையளிக்க வேண்டுமென்று தேவதாய் விரும்பிக் கேட்டுக்கொண்டாள். பிளாரன்ஸ் நகருக்கு அருகில் உள்ள கமார்சியா என்னும் இடத்திற்கு அவர்கள் சென்றனர். பின்னர் பிளாரன்ஸ் நகருக்கு அருகிலிருந்த மோந்தே செனாரியோ என்னும் இடத்திற்குச் சென்று ஒரு புதிய சந்நியாக சபையைத் தொடங்கினார்கள். தேவதாயின் ஏழு வியாகுலங்கள் மீது சந்நியாசிகள் பக்தி கொண்டிருக்க வேண்டும். அந்த பக்தியை மக்களிடையே பரப்ப வேண்டும். இது அவர்களது முக்கிய நோக்கம். அவர்களது உடை எப்படியிருக்க வேண்டும் என்று தேவதாயே காட்டினாள். இவர்கள் வீடு வீடாகப் போய் தர்மம் கேட்பார்கள். ஒரு முறை இவர்கள் தர்மம் எடுத்துக்கொண்டு செல்கையில் கூட்டமாய் நின்ற சிறுவர்கள் மரியாயின் ஊழியர்களே என இவர்களை அழைத்தனர். அந்த சிறுவர்களின் மத்தியில் பிலிப்பென்சி என்ற சிறுவனும் இருந்தான். இவர் பின்பு புனிதரானார். **சிந்தனை :** அன்னையின் வியாகுலங்கள் மீது நம்மிடம் அனுதாபம் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் சிந்தித்து அற்பப் பாவத்தையும் விலக்கும் வரத்தைக் கேட்போம். **செபம் :** வியாகுலமும் நேசமும் இரக்கமுமுள்ள மாதாவே, நாங்கள் அற்பப் பாவத்தையும் விலக்கும் வரம் பெற்றுத் தாரும்.

**- தூயவர்களின் வரலாறு**

## நன்றிகள்

திருக்கல்யாண மாதா திருவிழா, 101வது ஆண்டு தேர்ப்பவனி விழாவை சிறப்பிக்க வருகை புரிந்த தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு. **இவோன் அம்புரோஸ்** அவர்களுக்கும்,சிவகங்கை மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு எட்வர்ட் பிரான்சிஸ் அவர்களுக்கும், மறைமாவட்ட முதன்மைக் குருக்களுக்கும், முன்னாள் முதன்மைக் குருக்களுக்கும், மறைவட்ட முதன்மைக்குருக்களுக்கும் பல்வேறு பங்குகளிலிருந்து வருகை புரிந்த அனைத்து குருக்களுக்கும், அருட் சகோதரிகளுக்கும், அருட்பணியாளர்களுக்கும் திருக்கல்யாண மாதா திருவிழா நிகழ்வுகள் பற்றிய தொலைக்காட்சி விளம்பரங்கள், பேனர்கள் மற்றும் சுவரொட்டிகள் செய்து தந்த திரு. எட்வின் காமராஜ் குடும்பத்தினருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

**- பங்குத்தந்தை**

# வரவேற்கிறோம்

**இறை ஆசீராய் எம் இல்லங்களில் பிறந்து பொற்பை திருச்சபையை அலங்கரிக்கும் அன்பு மலர்களே உங்களை பாசமுத்தத்துடன் வரவேற்கிறோம்**

1. **A.**மடோனா
2. **M.**ஈஸ்வரி பிரபா
3. **M.**மரிய அக்கிலிஸ்
4. **A.**திருக்கல்யாண வர்ஷீலீ
5. **A.**டினோஷா அட்லின்
6. **C.**திருக்கல்யாணி
7. **X.**அந்தோனி ஆல்வின்
8. **J.**ஆன்றோ ஜட்சன்
9. **C.**ஏஞ்சல் சோபி
10. **M.**ஆரோக்கிய சிம்சோன் ராஜா
11. **T.**மரிய ஆன்ஸ்வின்
12. **G.**ஜெஸ்லின் ரேச்சல்
13. **V.**செனோன் சாஷிகா
14. **A.**மரிய ஏஞ்சலின்
15. **K.**பிரான்சிஸ் ஜெனிஸ்டன்
16. **R.**அந்தோனி நிக்சன்
17. **J.**ஜெஸ்லின் விண்ணரசி
18. **A.**தருண் ராஜா
19. **J.**சகாய சந்தியா
20. **S.**தன்ஷிகா லிசானியா
21. **D.S.**தினுஷியா
22. **J.**சாம் ஜெரிஸ்
23. **A.**சாம் மாணிக்
24. **J.**ஜென்சன்
25. **T.**ஜஸ்வின் இருதயதுரை
26. **S.**ஜெபாசிலின் கிப்டி
27. **S.**மரிய டெபிஸ்
28. **C.**அந்தோனி சூர்ய பாலன்
29. **J.**அனிஸ்யா

# லூர்து அன்னை

1858ம் ஆண்டு பிப்ரவரி 11ம் நாளிலிருந்து ஜுலை 11ம் நாள் வரை பிரான்ஸ் நாட்டில் உள்ள லூர்து என்னுமிடத்தில் பெர்னதத் என்னும் 14 வயது சிறுமிக்கு தேவதாய் 18முறை காட்சி கொடுத்தார். 18 தடவையும் அன்னையின் கையில் ஜெபமாலை இருந்தது. பாவிகளுக்காக செபிக்கும்படி தவம் செய்யும்படி, அற்புத சுனையிலிருந்து நீர் அருந்தும்படி தேவதாய் கேட்டுக்கொண்டார்கள். அன்னையின் பெயரை தெரிவிக்கும்படி பெர்னதத் திரும்பத் திரும்ப கேட்டார். மாதா புன்சிரிப்புடன் கரங்களைக் குவித்து "**நாமே அமல உற்பவம்**" என்று சொல்லி மறைந்தார்கள். அமல உற்பவ அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

– மிக்கேல் உஷா. பொற்பை



# வாழ்த்துகிறோம்

| எண் | மண நாள் | மணமக்கள் | ஊர் |
|---|---|---|---|
| 1. | 26.12.13 | **அந்தோணிராஜ் செல்வராணி** | நவமுதலூர் |
| 2. | 10.01.14 | **ஆரோக்கிய ஜெகதீசன் ஜெயசந்திரிகா** | பொற்பை |

# விவிலியத்தில்
# அன்னை மரியாளுக்கு வணக்கம்



அன்னை மரியாளுக்கு நாம்தான் ஏதோ தெரியாமல் வணக்கம் செலுத்துகிறோம் என்று நினைக்க வேண்டாம். விவிலியத்தில் இயேசுவோடு சேர்ந்து யோசேப்பும், எலிசபெத்தும் சிறப்பான வணக்கம் செலுத்துகின்றனர்.

**1. இயேசு**

இயேசு விவிலியத்தில் பல இடங்களில் மறைமுகமாக அன்னை மரியாளுக்குச் சிறப்பான வணக்கம் செலுத்துகிறார். தனது விரலை இயேசுவின் விலாவுக்குள் இட்டாலொழிய நான் அவரை நம்பமாட்டேன் என்று கூறிய புனித தோமையாருக்கு இயேசு கூறிய பதில், அன்னை மரியாளுக்கு வணக்கம் செலுத்துவதாக அமைகிறது. அதாவது, நீ கண்களால் என்னைக் கண்டதால் நம்பினாய் காணாமல் நம்புவோர் பேறுபெற்றோர் (யோவா.20:29) என்ற வார்த்தை அன்னை மரியாளுக்குப் பெருமை சேர்க்கிறது. கடவுளைக் காணாமல் நம்பியவர்களில், மனுக்குலத்திலேயே முதன்மையான பெண் அன்னை மரியாள் தான். இதைத்தான் புனித அகஸ்டின் அழகாகக் கூறுகிறார் : கருவறையில் உள்வாங்கும் முன்னரே இயேசுவை தனது இதயத்தில் பெற்றவர் அன்னை மரியாள்.

**2. யோசேப்பு**

யூத சட்டப்படி கணவன் தனது மனைவி எனத் திருமண ஒப்பந்தம் ஆன பிறகு, தனது வீட்டிற்குக் கூட்டிச் செல்கிறவரை அந்தத் திருமணம் முழுமையானது அல்ல. ஆனாலும் திருமண ஒப்பந்தத்திற்குப் பின், கணவனும் மனைவியும் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளும் சட்டப்பூர்வமானவை ஆகும். (The Gospel of Luke, Sacra Pagina Series VHI 3. p-39)

யோசேப்பு கூடி வாழ்வதற்கு முன் தனது மரியாள் கருவுற்றிருப்பது தெரிய வந்ததும், அவரை மறைமுகமாகக் கைவிட்டுவிடத் தீர்மானிக்கிறார். நீதிமான் என்று அழைக்கப்படுகிற யோசேப்பு, மரியாளை விபச்சாரி என்று சமுதாயத்திற்கு வெளிப்படுத்தியிருக்கலாம். உண்மையான யூதன் என்ற முறையில் மரியாள் மீது. முதல் சாட்சி என்ற முறையில் முதல் கல்லை எறிந்திருக்கலாம். (இ,ச. 22:20-21) யூத முறைப்படி விபச்சாரத்தின் முதல் சாட்சி முதல் கல்லை விபசாரத்தில் பிடிபட்டவர் மீது எறிய வேண்டும். எனவே தான் இயேசு உங்களுக்குள் பாவம் செய்யாதவன் முதலில் கல்லெறியட்டும் என்கிறார். (யோவா.8:7) ஆனால் நீதிமான் யோசேப்பு, அன்னை மரியாள் பற்றி உயர்வான கருத்தை மக்களுக்குக் கொடுக்க நினைக்கிறார். இழிவான தண்டனையிலிருந்து மரியாளைக் காப்பாற்றுகிறார். இவ்வாறு யோசேப்பு மரியாளுக்கு முதல் வணக்கத்தை செலுத்துகிறார்.

### 3.எலிசபெத்

இயேசுவின் காலத்தில் பதவியும், பணமும், படித்த சட்டமும் ஒருவரைச் சமுதாயத்தில் உயர்வான அந்தஸ்தில் வைத்து அழகு பார்த்தது. எனவே தான் பரிசேயர்களும், சதுசேயர்களும், சட்ட வல்லுனர்களும், குருக்களும் உயர்வாக மதிக்கப்பட்டனர். ஏழைகள் நாயிலும் கேவலமாக நடத்தப்பட்டனர். (லூக். 16:19-31)

ஆனால் லூக், 1:39-45-ல் எலிசபெத் அன்னை மரியாளுக்கு வணக்கம் செலுத்துகிறார். குருத்துவ வழிமரபில் வந்த எலிசபெத் சமுதாயத்தில் உயர்வாகக் கருதப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய உயர்குலப் பெண், சாதாரண ஏழைப் பெண்ணான மரியாளை உயர்த்திப் பேசுகிறார். சமுதாயத்தில் மரியாள் எந்த விதத்திலும் உயர்ந்தவள் அல்லள், அத்தகைய மரியாளை, உயர்குலப் பெண் எலிசபெத் பெண்களுள் பேறுபெற்றவள் (லூக். 1:42) என்று முதன்மையான வணக்கம் (Veneration) செலுத்துகிறார்.

நன்றி : **தாயே எங்கள் தஞ்சமே**

### காலம் முழுதும் காப்பவளே...

பொங்கி வரும் காவிரியாய்
பொத்தக்காலன்விளை வீற்றிருக்கும்
கர்த்தரை கர்ப்பத்தில் தாங்கிய
கன்னியே காப்பாய் எம்மையே

காலம் முழுவதும் காப்பாயே
தந்தை சுதன் தூய ஆவியாய்
விண்ணில் ஆட்சி செய்பவளே
வேண்டும் எங்களை ஏற்றுக்கொள்ளும்
– **சுகிர்தமணி அன்பரசன்**, கவரப்பேட்டை

### பாசம் பொழியும் அன்னை

திருக்கல்யாண மாமரியே
திருவிழா காண வருகின்றோம்
மங்காத உம் திருமுகத்தை
மக்களுக்கு காண்பிப்பாய் தேரினிலே
பக்தர் கூட்டம் அலைமோதி
பத்து நாள் திருவிழா நிறைவேற்றி
பாசம் பொழியும் உம் மக்களை
பாங்காய் அணைத்து மகிழ்வாயே
திருத்தலம் வந்த பக்தர்கள்
திருக்கரம் பணிந்து உம்மையே
நன்மை பெற்று செல்லவே
நாளும் அருள்வாய் தாய்மரியே
– **ஜோஸ்பின் மோரிதாசன்,** கவரப்பேட்டை



### விண்ணில் வாழும் மாதரசி

அருளைப் பொழியும் அன்னையே
இருளை அகற்றும் அன்னையே
திரளாம் பக்தர் உம் திருத்தலத்தில்
பலரும் கூடி ஆர்ப்பரிக்க

அண்டினோருக்கு அன்னை நீ
கண்டவருக்கு கடவுள் நீ
விண்ணில் வாழும் மாதரசி
என்னில் வாழ வருவாயா?
– **ஜோஸ்பின் அபிசியா,** கவரப்பேட்டை



# குறுந்தகடு வெளியீடு

அன்னையின் திருவிழாவை முன்னிட்டு கல்யாணத் தாய் மரியே - பாகம் 4 என்ற குறுந்தகடு அருட்சகோதரி. கீதா அவர்களால் வெளியிடப்பட்டது. அதன் முதல் பிரதியை பங்குத் தந்தை அருள்திரு. பபியான் ஜோசப் அவர்களும் இரண்டாவது பிரதியை திரு. காமராஜ் அவர்களும் பெற்றுக் கொண்டார்கள். ஒலிநாடா வெளியிட உபயம் செய்து உதவிய திரு. **S.M.A.** ஜார்ஜ் குடும்பத்தாருக்கு நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம

**– பங்குத்தந்தை**

# திருத்தலதிருவிழா உணவகம்

அன்னையின் ஆலய வளாக வட பகுதியில் பவள விழா மணடபத்தின் தாழ்வாரத்தில் உணவகம் ஒன்று அமைக்கப்பட்டது. உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் பயன் அடையும்படி அவர்களுக்கு குறைவான விலையில் சிக்கன் பிரியாணி, இட்லி பூரி, கேசரி, டீ, காபி, புரோட்டா என வழங்கப்பட்டது. உணவகம் செயல்பட உதவிய திருக்கல்யாணத் தாய் புகழ் பரப்பும் பணிக்குழுவினருக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்

**- பங்குத் தந்தை**

# திருப்பயணிகள் தங்குமிட வசதி

வெளியூர் பக்தர்கள், அனைவரும் தங்குவதற்கு புனித மரியன்னை மேனிலைப்பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் தென்புறம் மற்றும் வடபுறம் பந்தல்களும் அமைக்கப்பட்டிருந்தது. மேலும் புனித மரியன்னை துவக்கப்பள்ளி, புனித வளனார் துவக்கப்பள்ளி மற்றும் பவளவிழா மண்டபத்தின் இரண்டாவது தளத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு அவர்களுக்குத் தேவையான தண்ணீர் வசதி, குளியலறை வசதி, தங்கும் இட வசதி, அமைக்கப்பட்டு இருந்தது. அதனை கவனித்த ஆசிரிய பெருமக்கள் தன்னார்வத் தொண்டர்கள், இளைஞர்கள், தன்னார்வ பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- பங்குத் தந்தை**

# அருள்தரும் இமயம் திருக்கல்யாணத் தாயின் திருவிழா கொடியேற்ற நிகழ்வுகள்

14.01.2014 செவ்வாய்கிழமை திருக்கல்யாணத் தாயின் திருவிழா ஆரம்ப நாள் அன்று மாலை 6 மணிக்கு கோயில் மணிகள் ஒலிக்க, ஜெபமாலை, மாதாவின் பிரார்த்தனை சொல்லப்பட, மக்கள் அனைவரும் ஆலய முற்றத்தில் ஒன்று கூடி, புனித மிக்கேல் அதிதூதரின் சப்பரத்தை மேள வாத்தியங்கள் முழங்க, பக்தியுடன் ஆலய ரத வீதியைச் சுற்றி வந்தனர். பின்னர் மக்கள் அனைவரும் பங்குத் தந்தையின் இல்லம் வந்து கொடியேற்ற நிகழ்வுக்காக வருகை தந்திருந்த சிவகங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு **எட்வர்ட் பிரான்சிஸ்** மற்றும் பங்குத் தந்தையுடன் கொடியேற்ற நிகழ்வுக்காக வருகை தந்திருந்த அனைத்து குருக்களுக்கும் மாலை அணிவித்து கோவிலுக்கு பவனியாக அழைத்து வந்தனர். பின்னர் கோவிலுக்குச் சென்று பங்குத் தந்தை அன்னையின் கொடியை ஏந்தி வர பாடகர் குழுவினர், மாதாவின் பாடல் பாடிக் கொடி மரத்திற்கு கொண்டுவர அன்னையின் கொடி எடுத்து வரப்பட்டது. ஆயர் அவர்கள் கொடியை அர்ச்சித்து, கொடிமரத்தில் கொடியை ஏற்றி வைத்தார்கள். ஆலய மணிகள் ஒலிக்க மக்கள் பண்ணிசைக்க வாண வேடிக்கைகள் வானில் வண்ணக் கோலமிட திருவிழா ஆரம்பமாகியது. நிறைவாக மக்கள் அனைவருக்கும் பொங்கல் விருந்து வழங்கப்பட்டது. - **பெலிக்ஸ் அந்தோனி,**

ஆசிரியர்,பொற்பை

# குட்டி ஏஞ்சல்கள் திருவிழா – 10.02.2014



“சிறு பிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள் என மொழிந்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து இறை ஆட்சியை சிறு பிள்ளைபோல் ஏற்றுக் கொள்ளாதோர் அதற்குட்பட மாட்டார் ”(மாற்கு : 10 : 14-15)

குழந்தைகள் குழந்தைகளுக்காக உதவிடும் நோக்கில் செய்யப்படும் உலகளாவிய மாபெரும் சபைதான் பாலர் சபை. பாலர் சபை இயக்கம் பிரான்ஸ் நாட்டில் உருவானது நான்சி என்னும் மறை மாவட்டத்தின் ஆயராக பணியாற்றிய சார்லஸ் தெ.போர்வின் ஜாண்சன் என்பவர் பாலர் சபையை 1843ல் ஏற்படுத்தினார். திருத்தந்தை 11 ம் பத்தி நாதர் பாலர் சபையில் சேர்வதன் மூலம் ஒவ்வொரு கத்தோலிக்க குழந்தையும் நல்ல கிறிஸ்தவர்களாக கூடிய மன நிலையையும் மதிப்பீடுகளையும் பெற முடியும் என்று சொல்லி பாலர் சபையை தனது நேரடி கண்காணிப்பில் உள்ள திருத்தந்தையின் சபையாக உயர்த்தினார். பாலர் சபையானது இன்று உலகில் 127 நாடுகளில் செயல்படுகிறது. இறை வேண்டல், தியாகம், பொருள் உதவிகள் வழியாக தங்கள் திருத்தூதர் பணியை ஆற்றத் தூண்டுவதே இச்சபையின் முக்கிய நோக்க மாகும். பிப்ரவரி 2 ம் ஞாயிறு பாலர் சபை தினமாக நமது பங்கில் கொண்டாடப்படுகிறது.

- **லூசியா மெர்லின்**, ஆசிரியை, **இராஜேஸ்வரி** ஆசிரியை, பொற்பை.

# வரவேற்கிறோம்

**21.01.2014 திருக்கல்யாண அன்னையின் திருவிழாவின் போது மேதகு ஆயர் இவோன் அம்புரோஸ் அவர்களின் திருக்கரத்தால் உறுதிப்பூசுதல் பெற்றவர்கள்**

1. **J.**அன்டனி சகாய ஹரிஸ்
2. **L.**ஜென்சன் அன்டோ
3. **X.**அட்ரிக் கல்யாண்
4. **A.**பிரான்சிஸ் செல்வ சுபஹான்
5. **B.**ஆனந்த ஜெனித்
6. **M.**கிரண் ராஜ்
7. **J.**அருள் தமிழ்செல்வன்
8. **A.**செல்வ ராஜா
9. **K.**மிக்கேல் அமல்ராஜ்
10. **X.**உபகார ஜெகதீஷ்
11. **F.**அந்தோனி பிரிட்டோ
12. **M.**அந்தோனி செல்வ றொபிசன்
13. **A.**திருக்கல்யாண ஜாக்சன் துரை
14. **J.**அபிஷேக் ராஜா
15. **P.**வினித் றெக்ஸ்டன்
16. **S.**அபிஷேக்
17. **M.**றொனால்டு ரியாஷ்
18. **J.**அரிஸ்வின்
19. **A.**சேவியர் மெல்கின்
20. **A.**தேவ சுனில் ரோஷன்
21. **M.**அலன் ஷம்மா
22. **S.**அருண் ராஜ்
23. **D.**டோமினிக் ரோஷன்
24. **D.**டோமினிக் ரிச்சர்ட்
25. **R.**அஜித்
26. **X.**பிரின்ஸ்
27. **J.**ஜூலியட் அனுஷா
28. **M.**மரிய தினிஷா
29. **M.**மரிய ஜெயசீலி
30. **A.**அந்தோனி ஷர்மிளா
31. **J.**ஜாய்ஸ் ப்ரீத்தி
32. **A.**மைக்கிள் டொனிசா
33. **M.**மேரி திவ்யா ரோஷினி
34. **P.**ஜெனிபா எழிலரசி
35. **J.**ஜெனிபர் திவ்யா
36. **R.**ஆரோக்கிய சினேகா
37. **C.**அர்ச்சனா மேரி
38. **G.**ஸ்னேகா
39. **D.**டோமினிக் றென்னிலா
40. **E.**அட்லின் பெனினா
41. **D.**டெனிலா மெரிஸ்
42. ஜெ. நிஷார்லின்
43. ஜெ. ஷார்லின்

# ஊர் பொது அசனம்

திருக்கல்யாண அன்னையின் திருவிழா நிறைவு பெற்ற அடுத்த நாள் 24.01.2014 அன்று மாலை திருப்பலிக்கு பிறகு ஊர்ப் பொது திருவிழா சிறப்பு அசனம் நடைபெற்றது. இந்த சிறப்பு அசனத்தில் அன்னையின் பக்தர்கள் அனைவரும் எந்தவித வேறுபாடுமின்றி அன்னையின் ஆலய வளாகத்தில் ஒன்றாக அமர்ந்து உணவு அருந்தி தங்கள் அன்பை பகிர்ந்து உறவை புதுப்பித்துக் கொண்டு அன்னையின் ஆசியைப் பெற்றுச் சென்றார்கள். பங்குத்தந்தை மற்றும் பங்கு மக்களோடு இணைந்து அசனத்தை சிறப்பாக நடத்தி தந்த ஊர் அசன கமிட்டியார் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்கு நன்றியும் பாராட்டுகளையும் அர்ப்பணிக்கிறோம்.

-பங்குத் தந்தை

# வாழ்த்துகிறோம்

**23.01.2014 திருக்கல்யாண அன்னையின் திருவிழாவின் போது மேதகு. ஆயர். இவோன் அம்புரோஸ் அவர்களின் திருக்கரத்தால் புதுநன்மை பெற்ற குழந்தைகள்.**

1. **A.**டிவைனி ஸ்டார்லா
2. **J.**நிகிதா ஷரண்
3. **J.**சகாய ஜெரின்
4. **L.**அந்தோனி ஜெர்லின்
5. **J.**ஜாய்ஸ் பிரிட்டோ
6. **J.**தனிஸ் அன்சில்
7. **A.**ஆரோக்கிய ஜனனி
8. **M.**லிபியா ஆண்ட்ரூஸ் மேரி
9. **D.**விஜி ஞான திவ்யா
10. **V.**பூஜா அமல மேரி
11. **M.**ஜெனிபர்
12. **J.**சகாய ஜெப்ரின்
13. **D.**திலக் ஞான பிரிட்டோ
14. **A.**அந்தோனி சகாய டெல்சி
15. **A.**அந்தோனி ரமூணா
16. **P.**அந்தோனி ராவீன்
17. **T.**ஆமீரான் ஜோஸ்வா
18. **J.**சகாய வளன்
19. **S.**ஜோயல்
20. **J.**ஜுலியன் டிரோஸ்
21. **A.**மரினஸ் ஜெமினா
22. **G.**ஜெய்சன் டிசோன்
23. **R.**அந்தோனி நிக்சன்
24. **J.**சகாய சித்ரா ஜென்சி
25. **P.**டைசன்
26. **M.**ஆபிரகாம்
27. **J.**அந்தோனி மெல்வின்
28. **S.**வர்க்கீஸ் ஜெனிபர்
29. **A.**அந்தோனி பெனிபர்ட்
30. **A.**லின்சி ஜெசிந்தா
31. **J.**கவிதா
32. **J.**சரண்யா
33. **F.**சபின் ரொமினா
34. **F.**அந்தோனி தமிழ்ச்செல்வன்
35. **A.**ஜோவின் அர்னால்டு
36. **T.**அபினேஷ்
37. **A.**செசாரியோ ஆண்ட்ரூஸ்
38. **A.**ஆன்றோ அல்சன் ராஜா
39. **A.**ஆரோக்கிய ஹெரிக்சன் ராஜா
40. **A.**ஆன்றனி ஜெபாஸ்
41. **A.**ஆன்றனி ஜெரால்டு
42. **M.**நவப்பிரியன்

# புனித மேரி மேஜர் தேவாலயம்

உரோமையில் உள்ள புனித மேரி மேஜர் என்ற பேராலயம் அன்னை மரியாவுக்காக எழுப்பப்பட்ட முதல் திருத்தலம் ஆகும். இந்த பேராலயத்தில் இயேசு சபையை நிறுவிய புனித இலாயோலா இஞ்ஞாசியார் தனது முதல் திருப்பலியை 1538ம் ஆண்டில் டிசம்பர் மாதம் 24ம் தேதி இரவு நிறைவேற்றினார். இப் பேராலயத்தில் இயேசு பிறந்த குடிலின் ஒரு பகுதி பாதுகாக்கப்பட்டு வருகிறது. இப்பேராலயம் பல நூற்றாண்டுகளாக திருத்தந்தையர்களின் முதன்மையான பேராலயம் என்று கருதப்பட்டு வந்துள்ளது.

– **டே. நிஜிதா,** வெள்ளக்கோவில்


புனித மேரி மேஜர் பேராலயம்
ரோம்

# உள்ளத்தில் இருத்திச் சிந்தித்தார்

அன்னை மரியா இயேசுவைப் பெற்றெடுத்த தாய் மட்டுமல்ல, கிறிஸ்துவின் மிகச் சிறந்த சீடரும் ஆவார். ஆகவே தான் அவர் கிறிஸ்தவ வாழ்வுக்கு ஒரு மாதிரியாகவும் விளங்குகிறார். அருள் வாழ்வின் தொடக்கம் கடவுளின் அன்பை உணர்வது, கடவுளின் நிபந்தனையற்ற அன்பை உணரும் ஒரு மனிதன் இறைவனை அன்பு செய்கிறான். இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனையும் அன்பு செய்கிறான்.



இறைவன் தனக்கு எத்துணை அரும்பெரும் காரியங்களைச் செய்துள்ளார் என்பதை உணரும் ஒரு ஆன்மா தான் இறைவனின் அன்பையும் உணர்கிறது. இந்த உணர்வின் ஒரு வெளிப்பாடுதான் நன்றி, மகிழ்ச்சி, புகழ்ச்சி. என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றுகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து என் இதயம் களிகூருகிறது. ஏனெனில் தாழ்நிலை நின்ற தம் அடிமையைக் கடைக்கண் நோக்கினார் என்று அன்னை மரியா புகழ்ச்சிக்கீதம், மகிழ்ச்சிக்கீதம் பாடினார். கடவுள் தன்னை அன்பு செய்கிறார் என்ற அனுபவத்தின் வெளிப்பாடுதான் இந்த மகிழ்ச்சி கீதம். வல்லமை மிக்கவர் எனக்கு அரும் பெருஞ்செயல் பல புரிந்தார்.

அன்னை மரியாவின் இறை அனுபவத்திலும் வளர்ச்சி இருந்தது எல்லா மனிதரையும் போல இறைவன் தன்னை அன்பு செய்கிறார் என்ற அனுபவத்தோடு கூட, மீட்புத் திட்டத்தில் கடவுள் தனக்கென்று கொடுத்திருந்த பங்கு, அருள் மிகப் பெற்றவர், பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர், ஆண்டவரின் தாய் போன்ற மறை உண்மைகளைப் பற்றிய அறிவிலும் அனுபவத்திலும் அன்னை மரியா வளர்ச்சி அடைய வேண்டியிருந்தது. முதிர்ச்சி அடைய வேண்டியிருந்தது. இந்த முதிர்ச்சியின் வெளிப்பாடுதான் அன்னையின் விசுவாச வார்த்தைகள். நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும். (லூக்கா.1:38). இந்த வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் அடைய அன்னை மரியா இறை அருளோடு ஒத்துழைத்தார். மரியா இந்நிகழ்ச்சி எல்லாம் தம் உள்ளத்தில் இருத்தி சிந்தித்துக் கொண்டிருந்தார். (லூக்கா. 2:19) அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்து இருந்தார். (லூக். 2:51).

அந்த தாயைப்போல நாமும் இறைவனின்அன்பையும், அன்பின் வெளிப்பாடான அரும்பெருஞ் செயல்களையும் உள்ளத்தில் இருத்தி சிந்தித்து வளர்ந்து இறை அன்பில் முதிர்ச்சி பெறுவோம். அன்னையின் அன்பை பெறுவோம்! இறையாசீர் பெற்றிடுவோம்!!

**–சகோ. லிப்டன் ராஜதுரை,**
வார்டன்,அழகப்பபுரம்



# கிச்சன் கார்னர்

## மீன் ரோஸ்ட்



**தேவையான பொருட்கள் :**
மீன் – 500 கிராம், மிளகுத்தூள் – 1ஸ்பூன், தனியா தூள் – 1ஸ்பூன், சீரகத் தூள் – 1ஸ்பூன், மஞ்சள் தூள் – அரை ஸ்பூன், முட்டை – 2, நல்லெண்ணெய் – 300 கிராம்

**செய்முறை :**

மீனை நன்றாக கழுவி சுத்தம் செய்த பின் துண்டுகளாக்கிக் கொள்வும். மிளகுத்தூள், தனியாத்தூள், சீரகத்தூள், மஞ்சள்தூள் சிறிதளவு உப்பு இவற்றை சிறிதளவு தண்ணீரில் கலக்கவும். இந்த கலவையை மீன்துண்டுகள் மீது பரவலாக தடவவேண்டும். எல்லா துண்டுகள் மீதும் தடவிய பின் மீன் துண்டுகளை அப்படியே அரைமணி நேரம் தடவிய கலவையோடு ஊறவைக்கவும்.

அதன் பின் வாணலியில் நல்லெண்ணையை ஊற்றவும். எண்ணெய் நன்றாக சூடேறியதும் மீன் துண்டுகளைப் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுத்து பரிமாறவும். மேலும் சுவை வேண்டுமென்றால் 2 முட்டைகளை நன்றாக அடித்து மீன் துண்டுகளின் மீது தடவி பின்பு பொரித்து எடுக்கலாம். பரிமாறுதற்கு முன்பு நறுக்கிய வெங்காயம் சிறிது கொத்தமல்லி இலை இவைகளோடு சிறிது எலுமிச்சம் பழச்சாறு கலந்து பரிமாறலாம்.

## பொற்பை இளைஞர்களின் சாகசம்

21.01.2014 அன்று இரவு நற்கருணை பவனி நிறைவு பெற்ற பிறகு ஆலய வளாகத்தில் வைத்து பங்குத் தந்தை தலைமையில் பொற்பை இளைஞர்கள் தங்களுடைய வீர, தீர, சாகச நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். குறிப்பாக சிலம்பாட்டம். சுருள் வாள் வீச்சு, தீப்பந்தம் சுழற்றுதல், தற்காப்பு கலைகள் போன்ற வீர விளையாட்டுக்களை மிக ஆர்வமுடன் செய்துகாட்டி மக்கள் அனைவரின் பாராட்டுக்களையும், பெற்றார்கள். பங்குத்தந்தை, மக்கள் அனைவரும் அவர்களுக்கு தங்கள் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்கள்.

**சிலம்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள்**

ஆசான் : **S.செல்வராஜ்**

**V.**ஜெகதீஸ், **J.**ஜோசப், **A.**இளையராஜா, **A.**ஜோஸ், **A.**ஜெயக்கொடி, **S.**ராஜன், **S.**செல்வராஜா, **A.**சாருக்கான், **S.**கோடீஸ்வரன், **M.**ரூபஸ், **S.**ஹைடன், **M.**அலன் **R.**பரதீஸ், **M.**சேவியர், **P.**ஆண்ட்ரூஸ், **J.**ஹரிஸ்

## இறை அஞ்சலி

| | | |
|---|---|---|
| 1.சந்தணசிலுவை | பொற்பை | 27.12.13 |
| 2.ஞானசெல்வம் | பொற்பை | 28.12.13 |

# வாழ்வு தரும் வார்த்தைகள் – பிப்ரவரி – 2014

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | புனித ஹென்றி மோர்ஸ் | 2சாமு 12:1-7,10-17 | மாற்கு. 4:35:41 |
| 2. | | மலா 3:1-4 எபி.2:14-18 | லூக். 2:22-40 |
| 3. | புனிதர்கள் ப்ளேஸ், ஆன்ஸ்கர் | 2சாமு.15:13-14,30,16 :5.13 | மாற். 5:1-20 |
| 4. | தூய ஜாண்பிரிட்டோ | 2சாமு.18:9-10,14,24-25 | |
| | | 30-19:3 | மாற். 5:21-43 |
| 5. | புனித அகதா | 2சாமு.24:2,9-17 | மாற். 6:1-6 |
| 6. | புனித பால்மீக்கி | 1அர.2:1-4,10-12 | மாற். 6:7-13 |
| 7. | புனித ஜூலியானா பால்கோநெரி | சீ.ஞா.47:2-11 | மாற். 6:14-29 |
| 8. | புனித ஜெரோம் எமிலானி | 1அர 3:4-13 | மாற். 6:30-34 |
| 9. | பாலர் சபை | எசா.58:7-10 1கொரி 2:1-5 | மத். 5:13-16 |
| 10 | புனித ஸ்காலஸ்டிகா | 1அர 8:1-7, 9-13 | மாற். 6:53-56 |
| 11 | லூர்து அன்னை | 1 அர 8:22-23,27-30 | மாற். 7:1-13 |
| 12 | புனித டாமியன் | 1அர 10:1-10 | மாற். 7::14-23 |
| 13. | புனித கேத்தரின் டி ரிசி | 1அர. 11:4-13 | மாற். 7:24-30 |
| 14. | புனிதர்கள் சிரில் மெதோடியஸ் | 1அர.11:29-32,12:19 | மாற். 7:31-37 |
| 15. | புனிதர்கள் பாஸ்டின் ஜோவிட்டா | 1அர 12:26-32,13:33-34 | மாற். 8:1-10 |
| 16. | ஆண்டின் ஞாயிறு 6 | சீ.ஞா 15:15-20 | |
| | | 1கொரி.2: 6-10 | மத். 5:17-37 |
| 17. | புனித ஃபௌண்டர்ஸ் | யாக். 1:1-11 | மாற். 8:11-13 |
| 18. | புனித சிமியோன் | யாக். 1:12-18 | மாற். 8:14-21 |
| 19. | புனித கான்ரேட் | யாக். 1:19-27 | மாற். 8:22-26 |
| 20. | புனித எலித்துரியஸ் | யாக். 2:1-9 | மாற். 8:27-33 |
| 21 | புனித பீட்டர் தமியான் | யாக்.2:14-24,26 | மாற். 8:34-9:1 |
| 22. | கயர் ஆஃப் புனித பீட்டர் | 1பேது 5:1-4 | மத். 16:13-19 |
| 23 | ஆண்டின் ஞாயிறு 7 | லேவி 19:1-2,17-18 | |
| | | 1 கொரி. 3:16-23 | மத். 5:38-48 |
| 24. | புனித சீசரியஸ் | யாக். 3:13-18 | மாற். 9:14-29 |
| 25 | புனித வால்பர்கா | யாக். 4:1-10 | மாற். 9:30-37 |
| 26 | புனித மெட்டில்டா | யாக். 4:13-17 | மாற். 9:38-40 |
| 27 | புனித கபிரியேல் | யாக். 5:1-16 | மாற். 9:41-50 |
| 28 | புனித ஹிலாரியஸ் | யாக். 5:9-12 | மாற். 10:1-12 |

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

**இடமிருந்துவலம் :** 1 எருசலேம் 5 ஆணவம் 9 காணிக்கை 13 சாரா 17 நினிவே 21 பேறு
**வலமிருந்து இடம் :** 2 தீர் 6 ஒன்றிப்பு 10 மணமுறிவு 14 தருமம் 18 எதினா 22 மகிழ்ச்சிப்பாக்கள்
**மேலிருந்து கீழ் :** 3 பெலிஸ்தியர் 7 முப்பது 11 தெபோரா 15 சோம்பல் 19 பயணம் 23 நாகூம்
**கீழிலிருந்து மேல் :** 4 குலதெய்வங்கள் 8 வணிகர் 12 சக்கர்தோன் 16 அசரியா 20 மகிழ்ச்சி.

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

**கவரப்பேட்டை :** ஜோஸ்பின் மேரிதாசன், அன்னபுஸ்பம் ராஜன், அனுஸா அகஸ்டின், கலாசகாயம், ஜோஸ்பின் அபிசியா, எல்ஜி தினேஸ், பெனிட்டா டோமினிக், கீதா சுரேஸ், சுகிர்தமணி அன்பரசன், ஜார்லின் பெமிலா வில்சன், ஜாண்சன் அனிதா, சேசு ஜென்சி.
**ஏரல் :** வெனிஸ்டா ராஜேஸ், பிரின்ஸியா அசோக், **மாதர்பக்கம் :** ஸ்டெல்லா பீற்றர், **பிரகாசபுரம் :** லூர்துமேரி தேவசகாயம், **கோவை :** சந்தனசெல்வி, சூசைமிக்கேல், **கும்மிடிப்பூண்டி :** லென்சியா – சூசை அமல்ராஜ், கபிரியேல் ஜெயசீலன் பொன்மேரி, ரவீஸ்டர் சுமதி, **விசுவாசபுரம் :** அந்தோனி சந்தன ஜெமிலா, **திருவள்ளுவர் நகர் :** சுதா, **ஓட்டன்சத்திரம் :** நிர்மலா சந்தியாகு ராஜன், **வெள்ளக்கோவில் :** டேவிட் தேவராஜன், **பொற்பை :** மேரி லீலா, தெரஸ்வின் ராஜன், எஸ்தர் குழந்தை ஜான்சி, ஜெயந்தி, அந்தோனி ஏசுதாசன், பிரின்ஸ் ஜேம்ஸ், சந்தன திரவியம், லூர்து ரெக்ஸ், கபிரியேல் மேரி, குயின்ரோஸ் பாக்கியம், ரெஜினாள் மேரி, ஜோஸ்பின். **பொள்ளாச்சி :** அபிஷா நித்யா

## பொங்கல் விளையாட்டுப் போட்டிகள்

நமது சாஸ்தாவிநல்லூர் ஊராட்சி மன்றத்தின் சார்பாக பொங்கல் நாளை முன்னிட்டு ஊரக விளையாட்டுப் போட்டிகள் பொத்தக்காலன்விளை புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் வைத்து 11.01.14 மற்றும் 12.01.14 ஆகிய இரு தினங்களாக நடத்தப்பட்டது. இதில் சாஸ்தாவிநல்லூர் பஞ்சாயத்துக்குட்பட்ட பொத்தக்காலன்விளை, நரையன்குடியிருப்பு, போலையார்புரம், கொழுந்தட்டு, வாலத்தூர், சுப்பிரமணியபுரம் ஆகிய ஊர்களிலிருந்து ஆண்களும் பெண்களும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களும் பெருவாரியான அளவில் கலந்து கொண்டனர். விளையாட்டுப் போட்களை ஊராட்சி மன்ற தலைவர் திரு. சூ மரியஅந்தோனி ஜாரஜ் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். துணை சேர்மன் திருமதி. ஜெயராணி அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

தடகளப் போட்டிகள், குண்டு எறிதல், வட்டு எறிதல், கபடி, கைப்பந்து, கயிறு இழுத்தல், ஆகிய போட்டிகள் நடைபெற்றன. உடற்கல்வி ஆசிரியர்கள் திரு. நெல்சன் திரு. பொன்ராஜ், திரு சந்திரசேகர், திரு. தனபால் ஆகியோர் நடுவர்களாக பணியாற்றினார்கள். **– வினோத்,** பொற்பை

## அருள்தரும் இமயம் திருக்கல்யாணத் தாய் மாத இதழ் செலவு விபரம்
## 01.08.2012 முதல் 31.12.2013 முடிய வரவு செலவு விபரம்

| மாதம் | வரவுகள் விபரம் | | | | மொத்த வரவுகள் | செலவுகள் விபரம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சந்தா மூலம் | விளம்பரம் | இதர வரவு | மொத்தம் | | அச்சு கூலி | அஞ்சலக செலவு | பேப்பர்,ஜெராக்ஸ் மற்றும் இதர செலவுகள் | மொத்தம் | இறுதி இருப்பு |
| முன் இருப்பு | | | | | | | | | | 4793 |
| ஆகஸ்ட் 2012 | 900 | 1000 | --- | 1900 | 6693 | 3500 | 2510 | 335 | 6345 | 348 |
| செப்டம்பர் 2012 | 1200 | ---- | --- | 1200 | 1548 | ---- | ---- | --- | ---- | 1548 |
| அக்டோபர் 2012 | 2000 | 500 | 10 | 2510 | 4048 | ---- | 2450 | 363 | 2813 | 1245 |
| நவம்பர் 2012 | 2100 | 1500 | --- | 3600 | 4845 | ---- | 125 | 210 | 335 | 4510 |
| டிசம்பர் 2012 | 2600 | 5500 | --- | 8100 | 12610 | 3500 | 2685 | --- | 6185 | 6425 |
| ஜனவரி 2013 | 3900 | 7000 | --- | 10900 | 17325 | 3500 | 1940 | 13 | 5453 | 11872 |
| பிப்ரவரி 2013 | 41600 | 9000 | 130 | 50730 | 62602 | 7000 | 4765 | 231 | 11996 | 50606 |
| மார்ச் 2013 | 9200 | 1000 | --- | 10200 | 60806 | 7000 | 2530 | 89 | 9619 | 51187 |
| ஏப்ரல் 2013 | 3000 | 500 | --- | 3500 | 54687 | ---- | ---- | --- | ---- | 54687 |
| மே 2013 | 3100 | 1000 | --- | 4100 | 58787 | 11900 | 2640 | 32 | 14572 | 44215 |
| ஜுன் 2013 | 300 | ---- | --- | 300 | 44515 | 3500 | 2500 | 180 | 6180 | 38335 |
| ஜுலை 2013 | 1600 | ---- | --- | 1600 | 39935 | 1000 | 2400 | --- | 3400 | 36535 |
| ஆகஸ்ட் 2013 | 900 | 1000 | --- | 1900 | 38435 | 3500 | 2600 | 3231 | 9331 | 29104 |
| செப்டம்பர் 2013 | 2200 | ---- | --- | 2200 | 31304 | 3500 | 30 | --- | 3530 | 27774 |
| அக்டோபர் 2013 | 2100 | 6500 | --- | 8600 | 36374 | 19200 | 4840 | 337 | 24377 | 11997 |
| நவம்பர் 2013 | 500 | 1500 | --- | 2000 | 13997 | ---- | 2440 | 30 | 2470 | 11527 |
| டிசம்பர் 2013 | 1000 | 1000 | --- | 2000 | 13527 | 3500 | 2480 | 48 | 6028 | 7499 |
| மொத்தம் | 78200 | 37000 | 140 | 115340 | 120133 | 70600 | 36935 | 5099 | 112634 | 7499 |

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | 2 | 3 |
| | 5 | | | | | | | 6 | |
| 9 | | | | | 12 | | 19 | | |
| | | 22 | ■ | 23 | | | | | |
| | | | | | 18 | | | 16 | |
| 4 13 | | | | | | 8 | | 15 | |
| 7 | 11 | ■ | ■ | | | | | | |
| | | 21 | | | 20 | 24 | | | |
| | | | | 14 | 17 | | | | |
| | | | | | | | | | 10 |

பதில்கள் தேடவேண்டிய பகுதி
திருத்தூதர் பணிகள்
அதிகாரம் 2 முதல்
அதிகாரம் 13 வரை.

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.02.2014**

## இடமிருந்து வலம்

1. ஒரே மனத்தோடு................. கூடி வந்தார்கள்.
5. இன்று நாங்கள் .................... செய்யப்படுகிறோம்.
9. பேதுருவையும் யோவானையும் விட்டுவிடச் சொன்ன பரிசேயன் யார்?
13. கடவுளுக்கு கோவில் கட்டியெழுப்பியவர் யார்?
17. எட்டு ஆண்டுகள் முடக்குவாதத்தால் படுக்கையில் கிடந்தவர் யார்?
21. ஆண்டவரின் ........................ அங்கு வந்து நின்றார்.

## வலமிருந்து இடம்

2. கால் ஊனமுற்றவர் கோவிலில் வைக்கப்பட்ட இடத்தின் பெயர் என்ன?
6. அருள்பொழிவு பெற்ற தூய ஊழியர் யார்?
10. எட்டாம் நாளில் அவருக்கு ........................... செய்தார்.
14. பிலிப்பு எந்த நகருக்குச் சென்று அங்குள்ளவர்களுக்கு மெசியாவை பற்றி அறிவித்தார்?
18. இத்தாலியா படைப்பிரிவின் நூற்றுவர் தலைவர் யார்?
22. ஏதோ ..................... காண்பதாக அவர் நினைத்துக்கொண்டார்.

## மேலிருந்து கீழ்

3. எல்லா மக்களும் ஒருசேர ஓடிவந்த இடம் எது?
7. நம்பிக்கை கொண்ட ..................அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தார்கள்?
11. மோசே எந்த நாட்டுக்கு தப்பி ஓடிவந்தார்?
15. எத்தியோப்பிய அரசி யார்?
19. சீடர்கள் கிறிஸ்தவர்கள் என முதன்முதலாய் அழைக்கப்பட்ட இடம் எது?.
23. கடவுளின் ...............................மேன் மேலும் பரவியது.

## கீழிருந்து மேல்

4. இதற்கு நாங்கள் .................................
8. யோசேப்பு எனும் லேவியர் எந்த தீவைச் சேர்ந்தவர்?
12. வேற்றினத்தாரின் நாடுகள் யார் தலைமையில் கைப்பற்றப்பட்டது?
16. சவுல் உணவு அருந்தி ........................... பெற்றார்.
20. கொடிய பஞ்சம் ஏற்படப்போகிறது என்று முன்னறிவித்தவர் யார்?
24. அரசர் சவுலின் தந்தை யார்?

## திருத்தல வழிபாடுகள்

- ★ ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு செபமாலை , 10.15 மணி முதல் 11.30 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு அதனைத் தொடர்ந்து ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். மாலை சிறப்பு மாலை ஆராதனையும் நடைபெறும். மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.00 மணிக்கு நவ நாள் திருப்பலியும் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- ★ மாதத்தில் முதல்செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலை திருப்பலி.
- ★ மாதத்தில் முதல் புதன் ஆலய கெபியில் மாலை திருப்பலி.
- ★ மாதத்தில் இரண்டாவது புதன் நான்கு சந்தி கெபியில் மாலை திருப்பலி.
- ★ மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்.
- ★ மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.
- ★ மாதத்தின் முதல் சனி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர் நடைபெறும்.

## இணையூர் வழிபாடுகள்

**நவமுதலூர்**

- ★ வாரம் ஒருமுறை ஞாயிறு திருப்பலி மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலி நடைபெறுகிறது.

## திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பெருவிழா

| | | |
|---|---|---|
| ஜனவரி 14 – | மாலை 6.00 மணி | திருவிழா கொடியேற்றம் |
| ஜனவரி 21 – | மாலை 6.00 மணி | சிறப்பு நற்கருணை பவனி |
| ஜனவரி 22 – | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசயத் தேர்பவனி<br>சிறப்பு மாலை ஆராதனை |
| ஜனவரி 23 – | காலை 6.00 மணி | திருவிழா திருப்பலி |
| | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசய தேர்ப்பவனி<br>நற்கருணை ஆசீர் |

### அடுத்த இதழ்

தவக்காலநோன்பு, புனித சூசையப்பர்விழா,

சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது இது பற்றிய தங்களுடைய சிறப்பு கவிதை, அன்னை பற்றிய சிறப்பு கட்டுரை, மற்றும் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் வந்து

**சேர வேண்டிய கடைசி நாள் : 15-02-2014**

சந்தாதாரராக ஆகுங்கள் !          அன்னையின் அருள் பெறுங்கள் !

# நாமே அமல உற்பவம்



solomon Graphics, Tsy. 9788675143